T.DRC 3626
RR No 15-3-91.

M91
116656

ஈகையில் தழைத்து

நாகையில் பிழைத்த

# அய்யாபிள்ளையின்

# மெய்யான சரித்திரம்.

MADRAS:

PRINTED FOR THE AUTHOR

AT THE M. E. PUBLISHING HOUSE.

1891.

[Price As. 2.] [விலை அணா ௨.

11655

15/3-1891

[illegible]கையில் தழைத்து

நாகையில் பிழைத்த

# அய்யாபிள்ளையின்

# மெய்யான சரிதம்.

இஃது

தன் தந்தைக்காகப்

பூமியில் புலம்பும்

சாமிதாஸ்பிள்ளையால்

பிரியமுடன் வரையப்பட்டது.

MADRAS:
PRINTED FOR THE AUTHOR
AT THE M. T UBLISHING HOUSE.
1891.

## * புலம்பல்.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

1. சீரயன் சித்தமோ? தேவர்கள் சினமோ?
சேயர்கள் செய்பவக் குறையோ?
சேருயர் பெரியோர் மனதின் துயரமோ?
நேசர்கள் செய்திட்ட பிழையோ?
பாருயர்மீது புரிவிலா என்னமோ?
பாரியாள் பதறின மொழியோ?
ஆருயர் அண்ணல் கழலினை அடைந்தாய்
அய்யாபிள்ளை மாதவனே!

2. பத்தியிற் சிறந்த நின்னிகரிந்தப்
பாரினில் கண்டறிந்திலேயன்
புத்திபோதனைகள் சொல்வதில் மெத்த
புனித குணநெறியுடையோய்
மெத்தவும் கனிவாய் விளங்க ஆலோசனை
விதம் விதம் செய்துமே வந்தாய்
சித்தமே திகைக்க சீக்கிரம் மறைந்தாய்
சீர் அய்யாபிள்ளை மாதவனே!

---

* அய்யாபிள்ளையின்மேல் உறந்தை வித்வான் ம-ா-ா-ஸ்ரீ ஏசுதாஸ்பிள்ளை இயற்றிய "சரமகவிபுஞ்சத்தில்" உள்ளது.

## பொருள் அட்டவணை.


1. பிள்ளை பிறந்ததும்
கல்வியிற் சிறந்ததும் ... ...

2. உத்தியோகம் அமர்ந்ததும்
பக்தியில் அமைந்ததும் ... ...

3. உத்தியோகம் உயர்ந்ததும்
பக்தியிற் சிறந்ததும் ... ... 11

4. அரிய அலுவலில் அமர்ந்ததும்
கிரியோகர் ஆலயம் அமைத்ததும் ... 17

5. தேவனை மறந்ததும்
பாவங்கள் புரிந்ததும் ... ... 19

6. புடமிடப்பட்டதும்
உடன் குணப்பட்டதும் ... ... 2[illegible]

7. நித்தமும் நீதனை நேர்ந்ததும்
பத்தனாய் அவர் பதம் சேர்ந்ததும் ... 39

முடிவுரை ... ... ... ... 46

15/3-1891

## முகவுரை.

யநய வெறுப்பும் பிறர்நல விருப்பும் செ
மாய் எந்த சுதனமும் விளக்கிய கருணை.
பிள்ளையின் மெய்யான சரிதை எவ்வகை நிலைமை
றுள்ள பல்வகைத் தாத்தோர்க்கும் ஐக்கியமாய்
யாகமாக உண்மையாய்க் கருதி உரிமையுடன்
யப்பட்டது.

சந்தோஷங்களின் நடுவில் இந்த நூலைத் திறந்த
ம், எந்த வீட்டின் பொருளும் சந்துஷ்டியை அரு
ளும். சஞ்சலங்கள் மிஞ்சுகையில், கெஞ்சும் துயர
கீதங்கள் தொஞ்சிப்போன நெஞ்சத்தைத் துஞ்சாத
துய்யனில் தஞ்சமுறச்செய்யும்.

இச்சரிதையை அச்சியற்றுவதில் ஆவலுடன் உதவிபுரிந்த சென்னை ஞா. தேவசகாயம் ஐயருக்கும், நன்னயபுத்திகள் உரைத்த ம-ா-ா-ஸ்ரீ. தி. சின்னதம்பி பிள்ளைக்கும், அச்சுப்பிரதிகளை எச்சமயமும் காதலுடன் சோதித்த ம-ா-ா-ஸ்ரீ. வே. வேதநாயகம்பிள்ளைக்கும் ருத்தான வந்தனம் உரித்துடன் தந்தேன்.

கனகப்பபிள்ளையின் கனத்த சரிதையைக் கவனிப்புடன் வாசிப்போர் காருண்யசிந்தையில் பெருகவும், கனவிலும் நினைவிலும் கடவுளை நேசிக்கவும், அகத்திலும் புறத்திலும் அவனையே ஆராதிக்கவும், இகத்திலும் பரத்திலும் இன்பமுடன் வாழவும் அன்பு நிறைந்த ஆண்டவர் அருள்புரிவாராக.

அ. சா.

## நந்துரை.

அன்புடைய மக்களாலேனும் ஆகமுடைய அன்பர்களாலேனும் ஒருவர் சரித்திரம் சொல்லப்படுமாயின், அவர் செய்தனவாகிய தீமைகள் விடப்பட்டும் நன்மைகள் மிகப்புனைந்துரைக்கப்பட்டுமிருத்தல் இயற்கை. உள்ளதை உள்ளவண்ணமே சொல்லலே பயன்தரும் எனக்கருதி, தாம் செய்யப்புகுந்த சரித்திரநூலில் மெய்புகல்வாராகிய மிகச்சிலருள் இந்நூலை இயற்றியவர் ஒருவர். கிறிஸ்துவர்கள் ஒழுகும் ஒழுக்கம் உலக ஞானிகளின் ஒழுக்கத்திலும் மிகச்சிறந்தது. உலகத்தவர் தம் ஞானிகளைச் சிறப்பித்தற்பொருட்டு அவர்கள் பெலவீனங்களையும் தவறுகளையும் வீழ்ச்சிகளையும் மூடி, அவர்களைச் சாக்ஷாத் கடவுளே என்று கொண்டாடி, அவர்களுக்குத் தேவன் தந்த மானுடபிறப்பைத் தம் இஷ்டம்போலத் தேவப்பிறப்பாக்குவார்கள். கிறிஸ்துவர்களோ மானுடரை மானிடரேயாய் நோக்கி, அவர்
தகளை உள்ளவண்ணமுரைத்து, படிப்பவர் கேட்
க்கு அவற்றை அச்சுறுத்தும் குறிகளாக நிறுத்தி, அவர்கள் நன்மைகளைப் புனைந்துரையாமல் சுயரூபமே தந்து, அவற்றைப் பிறரும் செய்யத்தூண்டுவார்கள்.
த்தியவேதம் முழுமையும் சரித்திரங்கள் இவ்வாறே சொல்லப்பட்டிருத்தல் காண்க.

இச்சிறுநூல் பெரும்பயன்தர அமலன் அருள் புரிக!

ஞா. தேவசகாயம் ஐயர்,

புரசை, சென்னை.

### * புலம்பல்.

(ஒத்த இராகம்:—"அப்பா தயாள குணநந்த."—ஞா. கீ.

1. இந்தப்புவியுமக்கு இருக்கசலித்ததோ?
ஐயாவே! ஐயாவே! தேவ
சுந்தர சமூகத்தின் சுகிர்தம்பலித்ததோ?
ஐயாவே! ஐயாவே!

2. அறுசுவைபோசனம் அருந்தகசந்ததோ?
ஐயாவே! ஐயாவே! தேவ
தரிசனரசபானம் தாகத்திற்கிசைந்ததோ?
ஐயாவே! ஐயாவே!

3. மஞ்சம்பஞ்சணையில்கண் மலரவும்விடுத்தீரோ?
ஐயாவே! ஐயாவே! தேவ
குஞ்சிதபாதத்தில் குழந்தையாய்ப் படுத்தீரோ?
ஐயாவே! ஐயாவே!

4. சோதரர் பாலகர் சுற்றத்தார் மறந்தீரோ?
ஐயாவே! ஐயாவே! தேவ
தூதர்சேனைசூழ துயில்கொளசிறந்தீரோ?
ஐயாவே! ஐயாவே!

5. மீதில்வெண்வஸ்திரம் மினுக்கையும் விண்டீரோ?
ஐயாவே! ஐயாவே! தேவ
நீதியின்ஆடைக்கு நிகரில்லைகண்டீரோ?
ஐயாவே! ஐயாவே!

6. கோட்டைக் கிணற்றின்சலம் குழம்பலென்றுவிட்டீரோ?
ஐயாவே! ஐயாவே! தேவ
ஆட்டின்ஜீவஊறல் அருவியைப்பெற்றீரோ?
ஐயாவே! ஐயாவே!

7. கேசமுலகிலில்லை நினைந்ததைத்துறந்தீரோ?
ஐயாவே! ஐயாவே! தேவன்
ஏசுகிறிஸ்தை விஸ்வாசித்திறந்தீரோ?
ஐயாவே! ஐயாவே!

8. மெய்யாம்வேதசொற்கள் மேன்மையைக்கொண்டீரோ
ஐயாவே! ஐயாவே! தேவ
அய்யாவின்பிள்ளையாய் அடியேனைச்சென்றீரோ?
ஐயாவே! ஐயாவே!

---

* அய்யாபிள்ளையால் புனையப்பட்ட இப்புலம்பல் † போது அவருக்கே உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

† கீர்த்திபெற்ற தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் பாடிய பாடல்கள் அடங்கிய "ஞானக் கீர்த்தனைகளின்" புத்தக

அய்யாபிள்ளையின்

# மெய்யான சரிதை.

வெண்பா.

அய்யாபிள்ளைசரித மன்பாகங்களிக்க
மெய்யுரிமைபூண்ட மகனுவேன்—வையகத்தில்
எல்லார்க்குஞ்சொல்ல வெனையாண்டகத்தனருள்
வல்லான் வழங்கும் வரம்.

## I. பிள்ளை பிறந்ததும் கல்வியிற் சிறந்ததும்.

அய்யாபிள்ளையென்பவர் கிறிஸ்து பிறந்த 1831-ம் வருஷம் விஞ்சைபெற்றிலங்கிய தஞ்சைஜில்லாவிலுள்ள தென்மார்க் அரசன் ஆண்ட தரங்காபுரத்தைச்சேர்ந்த சிக்கைக்கிராமமாகிய சுந்தரஞ்சேர் சந்திரப்பாடியில் பிறந்தார். அவருக்குச் சுத்தசுவிசேஷ லூத்தரன் மிசியோனில் உபதேசி உத்தியோகமாயிருந்த அவர் தாயின் சிற்றப்பனாகிய கனகப்பபிள்ளையின் நாமத்திற்கிசைய கனகப்பன் என்னும் நாமம் சூட்டி ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. குழந்தையாபிள்ளை என்னும் மறுநாமம் பெற்ற தைரியம்பிள்ளையின் மூன்றாவது குமாரனாகிய சாமிநாதபிள்ளை அவரின் அருமை தகப்பன். அவரது தாயார் ஆரோக்கியம்அம்மாள்.

குழந்தையாபிள்ளை கோபம் மிகுத்தவராய், பின் சந்ததி பெருவெளிச்சம் பெறக் கருதியல்ல, தன் சந்ததியைத் தான் விட்டகலக் கருதி கொதித்த குணமுடன் கோட்டைக்குருவினது வீட்டைநோக்கிச்

சென்று அந்தரான் சபையில் கர்த்தருக்குள் ஸ்நானம் பெற்றார். கோழை நெஞ்சற்ற இளந்தையல்லாத குழந்தையாபிள்ளையும் வீரிய மனங்கொண்ட தைரியம்பிள்ளையுமாகிய இவரைக்கொண்டு அன்புநிறைந்த ஆண்டவர் ஆறுதலைமுறைகளாகப் பெருகியிருக்கிற ஆயிரக்கணக்கான அவர் பின்னடியாரை இருளின் இடத்திலிருந்து அருளின் அகத்துக்கும், அந்தகாரப்பிரபுவின் அடிமைத்தனத்திலிருந்து ஸ்வீகாரப்பிள்ளைகளின் சுதந்தரத்துக்கும், அஞ்ஞான வாழ்வைவிட்டு மெய்ஞ்ஞான ஆளுகைக்கும் கொண்டுவந்து சேர்த்ததற்காக அவர் திருநாமத்திற்குத் துதியுண்டாவதாக.

சந்திரப்பாடி கிராமம் அய்யாபிள்ளையின் பெற்றோரின் சொந்தக்குடி கிராமம். சாமிதாஸ்பிள்ளை பூமிகாரப்பிள்ளையாயிருந்தார், பாவஜீவிபத்தாலல்ல, தேவஞானக் குறைவால். சாமிதாஸ்பிள்ளை காலையிலெழுந்து தேவனைத் துதிப்பதையறியாது, பொழுது விடிந்ததும் பூமிகொத்தப் புறப்படுவார். அவர் ஏழையாயினும் குடியிருக்க கூரையும், கொத்திப் பயிரிடக் கொல்லையும் இல்லாத அவ்வளவு தரித்திரரல்ல. அவர் வீட்டிற்குப் பின்னால் இருந்த சோலை அவர் எக்காலும் போன உத்தியோகசாலை. அவர் உழுது பயிரிட்ட உடைநிலம் அவர் எழுதிக் கிறுக்கின கடுதாசி. அவர் ஓங்கிப் போட்ட மண்வெட்டி அவர் உறுதியாய்ப் பிடித்த பென் இறகு. அவர் ஒவ்வொருநாளும் பாய்ச்சின தண்ணீர் அவர் செவ்வையாய் உபயோகித்த மைநீர்.

"உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

என்பதற்கிசைய தம் வேளாளஜாதிக்கேற்ப வேலை உழைத்தும் வியர்த்தமாகாமல் வேளாண்மைப் பணியைப் பண்பாய் நடப்பித்துத் தம் ஜீவிய ஓட்டத்தைச் சிறப்பாய் முடித்தார்.



சாமிதாஸ்பிள்ளையின் ஐந்தாவது பிள்ளையாகிய கனகப்பன் அய்யாபிள்ளை செல்வப்பொருளும், கல்விப்பொருளும், விசேஷமாய் ஆத்மப்பொருளுமாகிய மூவ்வகைப் பொருட்களுள் எவ்வகைப் பொருளும் அகத்திலும் புறத்திலும், வீட்டிலும் நாட்டிலும் கிடைக்க ஏதுவற்று வளர்ந்தாலும், தேவஅருளால் மேலே சொல்லிய முப்பொருளிலும் பிற்காலத்தில் ஐசுவரிய சம்பன்னராக விளங்கப்பெற்ற விந்தையான சரிதையை விரித்துரைக்கின்றேன்.

அய்யாபிள்ளை அப்பா என்னும் சொல்லைத் தப்பாமல் சொல்லவும், அம்மா என்னும் பதத்தைச் செம்மையாய் உச்சரிக்கவும், அண்ணா என்பதை வண்மையாய் வழுத்தவும், அக்காள் என்று திக்காமல் உரைக்கவும் இன்னும் பல கல்வியான மொழிகளைப் பலர் மெச்சக் குதூகலமாய்ப் பேசவும் கூடியவரானவுடனே அவரது பெற்றோர் சுந்தரம்சேர் சந்திரப்பாடியில் அந்தக் காலத்தில் வந்திருந்தனுத்தான் சொந்தப்பள்ளியில் செந்தமிழ் பாஷையை விந்தையாய்க்கற்றிட விடுத்தனுப்பினர். அய்யனின்அருளை மெய்யாய்ப்பெற்றிருந்த அய்யாபிள்ளை, விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதுபோல, தம் வயதிற்குத்தக்கதாகவே தமிழைத் தாராளமாய்த் தண்ணீர்போல வாசிக்கத் தேறினார்.

அக்காலத்தில் அவரது மூத்த தமைக்கையாராகிய சுந்தரம் சாந்தம்மாளைத் திருமணம்புரிந்திருந்த திடபுருஷராகிய கிறிஸ்தியான் வேதமுத்துப்பிள்ளை சிறப்புற்ற சிதம்பரத்தில் பேர்பெற்றோங்கி ஊர்முழுமைக்கும் ஒரே உபாத்தியாயராகத் தமிழுடன் இங்கிலீஷைத் தருந்தவண்ணம் தயிரும்சாதமும்போலத் தமது மாணாக்கருக்குத் தாராளமாய்க் கற்பித்துத் தன்மையுடன் தரித்திருந்தார். மேற்சொல்லிய மூத்த தமைக்கையாராகிய சுந்தரம்மாள் சந்திரப்பாடி வந்து, தன் தந்தையின் தலத்தில் தன் முதற்பேறான பெண்ணைப் பெற்றார்கள். இந்தப் பெண் பரணி நட்சத்திரத்தில் இருபற்களுடன்

பிறந்ததாம். பல்லுடன் பிறப்பு நல்லதிர்ஷ்டக் குறிப்பு, பரணி நட்சத்திரப் பிறப்பு தரணி ஆளும் சிறப்பு எனப் பிள்ளையைப் பார்க்க உள்ளே வந்த ஊரார் ஒருவரோடொருவர் உரைத்துக்கொண்டார்களாம். இப்பிள்ளைக்கு உத்தரன் மிசியோனில் ஞானபானம் இரத்தினம் அம்மாள் என்னும் நாமதேயம் சூட்டி ஞானஸ்நானம் செய்வித்தார்கள். நாராளும் பாருளும் நன்கு மதிக்கப்பட்ட இப்பெண்ணைத்தான் ஞானமுள்ள கர்த்தர் தமது தாசனாகிய அய்யாபிள்ளைக்கென்று குறித்துவைத்திருந்தார். சுந்தரம்மாள் வந்த வழியை நோக்கிச் சிதம்பரத்துக்குத் திரும்பிப் போகையில், தன் அருமைப் பெண்ணையும் அப்பெண்ணுக்கு இனி கண்ணாளன் ஆகும் கனகப்பன் அய்யாபிள்ளையாகிய தன் கடைசி தம்பியையும் தன்னுடன் அழைத்துப்போனார்கள். அப்போது அய்யாபிள்ளைக்கு ஆரம்பித்தவயது ஆறுடன் ஒன்று.

சிதம்பரம் சென்ற அய்யாபிள்ளை சீரான இங்கிலீஷை சிறுவயதில் கற்க ஆரம்பித்தார். சிதம்பரத்தில் பதமஞ்சரியும், சர்வ டையலாகென்னும் சம்பாஷணை புஸ்தகமும், பகலில் சொல்லிய பாரிசுகதைகளும், இரவில் சொல்லிய அரபிக்கதைகளும், கிளி சொல்லிய கிள்ளைக்கதைகளும் இவரது இளவயது இனிய பாடங்கள். இக்காலத்தில் இங்கிலீஷிலாவது தமிழிலாவது இவ்வகைக் கல்வியையன்றி எவ்வகைக் கல்விக்கும் இவர் அந்நியர். அய்யாபிள்ளை தேச இலக்கணம் தவிர பாஷை இலக்கணம் படித்தறியார். வண்ணான் கணக்குத் தவிர பின்னோர் கணக்கும் கணித்தறியார். புசிக்கும் சாஸ்திரம் தவிர, பூமிசாஸ்திரம் புகட்டப்பட்டறியார். வேதமென்பது பரிச்சேதம் இவருக்குத் தெரியாது. தெரிவிக்கப்படாத மேலே சொல்லிய அரிய நூல்களைக் குறையற கற்க கோரின மனதுடன் அய்யாபிள்ளை தம் தாயாரைத் துணைகொண்டு சென்னைமாநகரில் ஓர்



நன்னய குருவின்கீழ் சொன்னய ரீடராய் (Reader) சொற்ப வேலை செய்துவந்த தம் சின்னண்ணனாகிய குருபாதம் சமாதானம்பிள்ளையிடம் சேர்ந்தார். சேர்ந்த சிறுதினங்களுக்குள் சிந்தாதிரிப்பேட்டையில் அக்காலத்திலிருந்த அமெரிக்கன் மிசியோன் பாடசாலையின் வகுப்பு மூன்றாவதில் வண்மையாய் ஏற்றுக்கொள்ளப்பட்டார். இங்கிலீஷில் மூன்றாம் வாசகத்தைத் தாண்டாமல் வாசித்தார். லென்னியின் இலக்கணத்தை உன்னிதமாய் ஒப்புவித்தார். பூமிசாஸ்திரத்தில் தாமசமின்றித் தேறினார். வேதத்தில் அவர் படித்த ஞானோபதேசம் அவருக்கு வாயோபதேசமாகவும், யோவான் சுவிசேஷம் அவருக்குத் தேவாநுகூலநேசமாகவும், இனபோதம் அவருக்கு மனபோதமாகவும் இருந்தன. இவ்வாறு ஐந்துமாதகாலங்களாக அய்யாபிள்ளை அமர்ந்து அதிக ஆவலாய்க் கற்று அறிவில் அதிகரித்துவருகையில், இந்தக் கல்வியோடு இஸ்கூலைவிட்டு நீங்க இடர்கள் எதிர்ப்பட்டன.

குருபாதம் சமாதானம்பிள்ளை தன் சகோதரரில் இங்கிலீஷ் பாஷையை இங்கிதமாய்க் கற்றவர், செந்தமிழ் பாஷையைச் சொந்தமாக்கிக்கொண்டவர். ஆயினும் குடும்ப நோனாலுங் குருபாதம்பிள்ளைக்கும் குருவுக்கும் குணபேதம் குறுக்கிட்டது. சமாதானம்பிள்ளைக்கும் சபைகுருவுக்கும் சச்சரவு சம்பவித்தது. ஆகையால் உத்தியோகத்தை உதறித்தள்ளி வேலையை விட்டகன்றார், தன்னிடம் வந்த தாயையும் தம்பியையும் தாங்கத் தயங்கினார். அவ்வளவுதான் அய்யாபிள்ளை அப்போது அறிவில் கண்ட எல்லை. அவர் கல்விகற்க கொண்டிருந்த ஆசை ஆவி ஊசி போன தோசை. இப்போதும் அய்யாபிள்ளை செய்யக்கூடியதென்ன? பழைய கறுப்பண்ணனே கறுப்பண்ணன், பழைய மண் கிண்ணியே மண் கிண்ணி என்பதற்கேற்ப, பழைய கனகப்பனே கனகப்பன், பழைய பதமஞ்சரியே பதமஞ்சரியாகத்தக்கதாய்ச் சென்னைச் சென்றவர் சிதம்

பாம் திரும்பினார். முன்னால் சிதம்பரம் திரும்பி பின்னால் கூடலூர் போனார். சிறியண்ணனை விட்டவர் பெரியண்ணனை நட்டார்.

பெரிய அண்ணனாகிய தேவசகாயம்பிள்ளை தேவஊழியரும் தேடிவந்தோரைத் தேற்றி ஆதரிக்கும் திவ்விய புருஷருமாயிருந்தார். இவர் சாந்தாஸ்பிள்ளையின் மக்கள் ஐவரில் முதல்வர், அதிபக்திமான். ஆனால் அவர் நித்தம் வாசித்த சத்திய வசனம் தவிர லௌகிக புத்தகங்களில் பதமஞ்சரியே அவர் நிதம் படித்த புஸ்தகம். மற்ற நூல் எதுவும் முற்றும் அவருக்கு விரோதம். அண்ணனிடம் வந்த அய்யாபிள்ளை தாம் கொண்டுவந்த புத்தகங்களில் மொண்டு தந்து புகட்டுவோரின்றி திண்டாட்டம்கொண்டு தியங்கி நின்று இன்று கொஞ்சம் நாளை கொஞ்சமாகத் தமக்குத்தாமே யென்று தின்றுகொள்ள யோசித்து பிரயசப்படத் துவக்கினார். பட்டணமிருந்து கொண்டுபோன புத்தகங்களைப் படிக்கப் புகுங்கால், பக்தானைசக்திகமாய்க் கத்திக் கத்திச் சொல்லியும் இதமான பதமஞ்சரியை எடுத்துப் பதம் பதமாய்ப் படிக்காமல் இந்த என்னமோ ஏதோ இழவு ஏடுகளை எடுத்து எடுத்துப் பிரட்டுகிறாயே என்று பதமஞ்சரியை நிதமஞ்சரியாய் மதித்த அவர் பெரிய அண்ணன் கோபிப்பாராம்.

அக்காலத்தில் அய்யாபிள்ளையின் நிலைமை கல்வி விஷயத்தில் அதிபரிதாப நிலைமை. நாட்டில் கல்வி இல்லை, வீட்டில் கல்வி இல்லை, பள்ளி கல்வி இல்லை. புள்ளி கல்வி இல்லை, கற்பிப்பாருமில்லை, கற்கவிடுவாருமில்லை. இவ்வாறு பதினாறுவயது பாலியனாகி பள்ளி இல்லையே, கல்வி இல்லையே என்று ஏங்கி கவலைப்பட்டார். அக்கால படிப்பில் முக்கால்வாசிதானும் கற்காதவராயினும், அய்யாபிள்ளை முக்கால அறிவுமுள்ள முன்னவன் அருளால், மேலும் தன்னுடைய முயற்சியால் தற்காலக் கல்விக்குத்தக்கதாய்த் தேறி இங்கிலீஷில் இனிமையும் தமிழில் தன்மையும் பொருந்தும்



படி பேசி எழுதும் போதிவு பெற்று மானிடக் கல்வியில் மா சமர்த்தராய் விளங்கலுற்றார்.

படிப்பினை.

"புத்தி அதிகரிக்கக் கல்வி வேண்டும்,
பத்தி அதிகரிக்கச் செபம் வேண்டும்,
சத்தி அதிகரிக்க விசுவாசம் வேண்டும்."—ஞா. தொ. *

## 2. உத்தியோகம் அமர்ந்ததும் பக்தியில் அமைந்ததும்.

அய்யாபிள்ளை அஞ்ஞானம் நீங்கின மெய்ஞ்ஞான மார்க்கத்தில் பிறந்தவராயினும், வேத அறிவு போதுமானது அவருக்கு அப்போதிருந்ததில்லை. ஆயினும் உள் தேவதாபக்தியில் உண்மையாய்ச் சிறந்தவர். ஆலயந் தொழுவது சாலவும் நன்று என்பதற்கிணங்க, கோவில் மணிகேட்டு ஆவியில் களிப்பார். ஆராதனைக் கேளாமல் அங்கும் இங்கும் போகார். வசனத்தைக் கேட்க அசனமும் இழப்பார். போதகம் கேட்க காதவழி நடப்பார். சர்ச்சுமிஷியோன் கோவிலில் எச்சமயமும் இருப்பார். கூடலூர் கோவிலுக்கு ஆடலுடன் போவார். சபைக் கூட்டம் என்றால் கனகட்டமாய்ப் போவார். அய்யாபிள்ளை இக்காலத்தில் பதினேழுவயது பாலியர், பார்வையில் பிராமணர். முக அழகர், அக அழகர், ஓங்கிவளர்ந்தோர், ஒல்லேன் ஊழியர். பிள்ளையின் குணஅழகைக் குறிப்பாகவும், மனஅழகை மதிப்பாகவும், பிரதிதினமும் பிரியத்துடன் கவனித்து வந்த ஈஸ்ட் இந்தியான இங்கிலீஷ் மிஷியோன் கோவில் லீடர் ஒருவர் இரு மயிலுக்கப்பால் இருந்த ஓர் பள்ளிக்குப் பதில் உபாத்தி

* தரங்கை ஞா. சாமுவேல் ஐயர் இயற்றிய "ஞானமலர்க் கொத்து" என்னும் நூலிலுள்ள "ஞானத் தொடர்மொழிகள்."

யாராகப் பட்சமாய் நியமித்தனுப்பினர். பள்ளிக்கூடம் தமிழ் பள்ளிக்கூடம். சுவடிகளும் தமிழ் சுவடிகள். அய்யாபிள்ளை அவைகளை ஆயுசிலும் கண்டறியார். சுவடிகளைக் கண்ட அய்யாபிள்ளை கலங்கினார். தமிழ் கணக்கைக் கண்ட பதில் வாத்தியார் தத்தளித்தார். மெத்தவும் உள்ளே பயந்தார். அத்தனின் ஆணையை நயந்தார். இரவில் தாமே கற்பார். பகலில் பலமாய்க் கற்பிப்பார். சிறப்புற வேலையை நடப்பித்தார். மதிப்புற கல்வியைக் கற்பித்தார். பள்ளிக்கூடம் பலத்து ஓங்கிற்று. ஆனால் அதின் முன்வாத்தியார் திரும்பிவந்ததால், பதில் வந்த பின்வாத்தியாராகிய அய்யாபிள்ளை முன்னால் பார்த்து வந்த வழியைப் பின்னால் நோக்கித் திரும்பினார்.

சென்னையிலிருந்த அவர் சின்னண்ணன், பின்னால் கூடலூர்வந்து ஓர் சின்ன இங்கிலீஷ் பள்ளியை கன்னயமாய் வைத்திருந்தார். அய்யாபிள்ளை தம்மறிவில் விர்த்திபெறத் தக்ககாலம் இதுவென்று இன்னம்இரண்டு மாதங்களாய்ப் பின்னமற கல்விகற்றார். தங்கள் அய்யாபிள்ளைக்கு இங்கிலீஷ்கற்க பொங்கின ஆசைக்கு இங்கும் ஓர் சங்கடம் பங்கமாய் நேரிட்டது. ஆகையால் அய்யாபிள்ளை அவ்விடம் விட்டகன்றார். கனகப்பபிள்ளை கடும் பயணம்பண்ணினார். தரங்கைவழியாய் பாங்கிப்பேட்டைச் சென்றார். பாங்கிப்பேட்டையில் பாரி துரையாகிய லீகஸ்டம் துரைக்குச் சிலசிநேகிதரால் சிபாரிசு செய்யப்பெற்றார். துரைமகன், சிபாரிசு செய்யப்பெற்ற சிறுவர் இவரிடம் தான் பெற்ற சிறுவர் இருவரைச் சீருடன்கற்பிக்க ஒருமனதுடன் ஒப்புவித்தார். மேலே கண்டபடி அய்யாபிள்ளைக்குத் தமிழுக்கே தாளம் போட்டிருக்க இங்கிலீஷ்கற்பிக்க என்னசெய்குவார்? தயாளகர்த்தாவின் தாசனாகிய தாவீது நெடியன் கோலியாத்தைத் தாக்கிஜெயம்புரிய இஸ்ரவேலின் ஏகோவாவை இறைஞ்சினதற்கிசைய, அய்யாபிள்ளை தாம் கற்பிக்க வேண்டியதைக் கல்லாதாராயினும், எல்லாமறிந்த வல்லவனை இறைஞ்சி அவர் உதவியையே உறுதியாய் நம்பி



உபாத்தியார் உத்தியோகத்தை ஒப்புக்கொண்டார். இந்த இருவெள்ளைப் பிள்ளைகளுடன் அந்த ஊர் கனவான்களின் கறுப்பு சிகப்பு பிள்ளைகளையும் கலந்து சேர்த்து, துரை பங்களாவுக்கடுத்த ஓர் சரிபங்களாவை வாடகைக்கு வாங்கிப் பாங்கிப்பேட்டையில் பாரிப்பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தார். பாங்கிப்பேட்டையார் தரங்கையாரின் வரங்களை வாழ்த்தினர். அய்யாபிள்ளை திறங்கொண்டு தீர்க்கமாய்க் கற்பித்தார். அவர்கீழ் பள்ளி ஸ்திரங்கொண்டு பலத்தது. அய்யாபிள்ளையை ஊரார் மெய்யாய் மெச்சினர். கனகப்பபிள்ளையைப் பேட்டையார் கனமாய் எண்ணினர். கனகப்பபிள்ளையின் கல்விச்சாலை கனத்துவருகையில் குருபாதம்பிள்ளையின் கூடலூர்பள்ளி குறுகிப்போயிற்று. அய்யாபிள்ளையின் அன்றாடவருகல் அதிகரித்துவருகையில் சமாதானம்பிள்ளையின் சம்பாத்தியம் சரிந்துவீழ்ந்தது. அதை அறிந்த அய்யாபிள்ளை அண்ணனைத் தம்பிடம் அழைத்தார். வந்த தமையனை தலைமை வாத்தியாராக்கி பிந்தின வகுப்பைத் தாம் படிப்பித்தார். அண்ணனும் தம்பியும் திண்ணமாய்க்கூடி நுண்ணிய கல்வியை எண்ணிறந்த பிள்ளைகளுக்கு எடுத்துரைத்து வந்தார்கள்.

இஃதிப்படியிருக்க கனகப்பபிள்ளையின் கனத்த சாமர்த்தியத்தைக் காதினால் கேட்டறிந்த நாகூரின் கனவான்களாகிய சிலர் அய்யாபிள்ளையே வந்து அவர்களின் பிள்ளைகளுக்கு அறிவைப் புகட்டவேண்டுமென ஆவலாய் ஆசித்து ஆள்மேல் ஆள் அனுப்பி அவரை அவ்விடம் அழைப்பித்தார்கள். 1850-ம் வருஷம் அய்யாபிள்ளை அய்யனின் அருளை அகத்தினில் நினைந்து பாங்கிப்பேட்டை பள்ளிக்கூடத்தைத் தம் அண்ணனின் ஆளுகைக்கு அன்புடன் விட்டுத் தம் வரவை விரும்பியோர் தன்மையுடன் வசித்த வாகான நாகூருக்கு வந்துசேர்ந்தார். அய்யாபிள்ளை மேலே சொல்லியபடி அக்கால வேத அறிவில்

முக்கால் பேதையாராயினும் தேவபயம் அவரது ஜீவபுயம். தேவநேசம் அவரது ஆவியில் வாசம். தேவவிசுவாசம் அவர் மேவிய அகசகவாசம். அய்யாபிள்ளை மெய்யாகவே பரம அய்யா(வின்)பிள்ளையாயிருந்தார். அவர் கர்த்தரின் கிருபையின் கனத்த இருப்பிடம். அவர் தேவனின் தயவு ஜீவித்த சிறுகுடில். ஒன்றுமில்லாமையைக்கொண்டு நன்றுலகை நாட்டிய நற்பரன் எள்ளளவும்தக்கபடி கல்லாதப்பிள்ளைஅய்யாவைக்கொண்டு விள்ளரியபொருள் எல்லோருக்கும் சொல்வித்தா நல்ல சித்தங்கொண்டார். நாகூரில் பள்ளியை நாட்டிய சில நாட்களுக்குள் புது வாத்தியாரின் போதனைசக்தி போற்றி வாழ்த்தப்பட்டதால், ஊர் பிள்ளைகள்எல்லாம் ஒன்றுய்த்திரண்டு வந்துசேரவே, பள்ளிக்கூடம் பலத்தது. அவ்வூரிலேயே அநேக காலமாய் அதிபிரபல்லியப்பட்ட மூன்று பள்ளிக்கூடங்களும் முழுமையும் வெறுமையாகி அவைகளின் உபாத்தியார் அந்நிய ஊர்களுக்கு அலுவல் தேடிப்போயினர். அய்யாபிள்ளை தமிழில் இலக்கணத்தைத் துலக்கமாகவும், பத்துடன்ஒன்றும் நிகண்டை அதின் பத்ததி ஈறு கண்டும், நீதிநெறிவிளக்கத்தை அது ஓதின அறிவை விளக்கியும் கற்பித்தார். ஆங்கிலேய பாஷையில் லென்னிஸ் இலக்கணத்தைச் சொச்சிப்பித்துடனும், மர்ரேஸ் இலக்கணத்தை அதின் மறைவுகள் விலக்கியும், கிளிப்ட்ஸ் பூமிசாஸ்திரத்தை வெளிப்பட விளக்கியும், கணக்கதிகாரத்தைப் பிணக்குகள் போக்கியும், இங்கிலாந்து சரித்திரத்தை இங்கிதமாகவும், இந்துதேச சரித்திரத்தை விந்தையதாகவும் படிப்பித்தார். இவையுமன்றி, இந்தப் பள்ளியை ஆதரித்தோர் இந்துக்களாயினும், அய்யாபிள்ளை சுந்தமாய் அவர்கள் சொந்த உத்தரவு பெற்று சத்திய வேதத்தில் ஏகதேவனை என்னும் நேச சுவிசேஷத்தையும், புக் ஆப் நேட்சர் (Book of Nature) என்னும் பொருளான புத்தகத்தையும் புகட்டிவந்தார். நாகூருக்கடுத்த நாகபட்டணத்திலிருந்த சர்ச்சு மிஷியோன் ஐயமார் மிச்சமாய் சனிவாரங்களில் தம் பள்ளி



யைப் பார்வையிடவும், இன்புறப் பிள்ளைகளை வினவி விடைபெறவும் மிக்கவும் கேட்டுக்கொண்டு அவர்களின் ஆணைக்கு அய்யாபிள்ளை அன்புடன் அமைந்து நடந்தார். சிறுவருக்குமாத்திரமல்ல, நாகூரிலும் நாகையிலும் பெருமைபெற்றிருந்த பெலத்த வியாபாரிகளாகிய பெரியோரான மகம்மதியருக்கும் அய்யாபிள்ளை அரிய போதகராஞர். மூரின் யாத்திரைப் புத்தகத்தின் (Moore's Navigation) கூரான கணக்குகளைக் குறைபற குறிப்பிட்டுக் கணித்து அப்பெரியோருக்கு அதிதிட்டமாய் அறிவிப்பார். இதுகாரணமாய், இரக்கமுள்ள கர்த்தர் இவ்விருவர் இலகிதிபத்தின் கண்களில் இவருக்குத் தயைகிடைக்கச் செய்தார். நாகூரில் வசித்த அந்நல்ல காலத்தில் அய்யாபிள்ளையின் இனத்தார் அவரை அன்புடன் கூடலூருக்கு அழைப்பித்து, அவரது தமக்கையாராகிய சுந்தரம் சாந்தம்மாளின் சிரேஷ்ட புத்திரியாகிய ஞானபாணம் இரத்தினம்மாளை அவருக்கு சங்; கிசெம்மர் ஐயர்வர்களைக்கொண்டு திருமணம் செய்வித்தனர்.

படிப்பினை.

"ஒரு வேலையை
நல்நோக்கத்தோடு துவக்கு, கால்வாசி முடிந்தது,
நற்செபத்தோடு நடத்து, அரைவாசி முடிந்தது,
நல்முயற்சியோடு செய், முழுவதும் முடிந்தது."—
[ஞா. தொ.

## 3. உத்தியோகம் உயர்ந்ததும் பக்தியிற் சிறந்ததும்.

நாகூரில் நாளாபேரும் அய்யாபிள்ளையின் அதிசாமர்த்தியத்துக்காக அதிசயித்தார். பள்ளிக்கூடம் பலத்துவந்ததை நாகை வெஸ்லியன் மிஷியோன் நல்ல குருக்கள் சொல்லக்கேட்டு நாகையிலிருந்த தங்கள் பள்ளிக்குத் தக்க உபாத்தியாயர் அய்யாபிள்ளையே என்று அ

கத்தினில் குறித்து நன்றாய்ப் போதித்துவந்த ம-ா-ா-ஸ்ரீ கொர்நேலியுஸ்பிள்ளையவர்களின் பிறான இரண்டாவது வாத்தியாராக அன்பர் அய்யாபிள்ளையை அழைப்பித்து வைத்துக்கொண்டனர். 1859-ம் வருஷம் அன்னிடம் தயங்கி வருவோரை எண்ணிப்போகும் இடத்திற்கு பின்னமின்றி கொண்டுபோய்ச்சேர்க்கும் தென்னிந்திய ரெயில்வண்டி இன்னம் ஓட ஆரம்பியாத அந்த இள வயது காலத்தில் அய்யாபிள்ளை வெஸ்லியன் ஸ்கூல் வேலையைத் தம் இஷ்டமுடன் விட்டு முந்த ஸ்டோர்கீப்பராகவும் (Storekeeper), பிந்தி அதற்கொரு வெள்ளைத்துரையை நியமிக்கவே இவர் கறுப்புத்துரையாக நேற்றிவ் அஸிஸ்டாண்டு ஸ்டோர்கீப்பராகவும் (Native Assistant to the Storekeeper) நேமனம் பெற்று வேலைபார்த்துவந்தார். அய்யாபிள்ளைக்கு அக்காலத்தில் ஐம்பது ரூபாய் சம்பளம். அக்காலத்தில் அய்யாபிள்ளையிடத்தில் காணப்பட்ட யுக்திபுத்தியையும், பக்தி விநயத்தையும் இதழ் இதழாய் எடுத்து எழுதப்புகில் ஏடுகள் விரியும்.

கப்பல்களிலிருந்து அப்போது வந்திறங்கிய பார்ப்போர் திப்பிரமைகொள்ளத்தக்க மிக்கப் பாரமான பொருட்களுள் ஒன்றோடொன்றுற ஒழுங்காய் இணைக்க பல வெள்ளைத்துரைகள் சள்ளைப்படுவார்கள். இத்தொல்லையைப் பார்க்கும் அய்யாபிள்ளை மெள்ளென வந்து எல்லவரும் திகைக்கத்தக்கதாய் அச்சள்ளைப் பொருட்களைத் துல்லிதமாய்த் தொகுத்துவிடுவார். நல்ல செல்வாக்கும் பல்லவர் வரத்துப்போக்கும் பெற்றிருந்த அச்செல்ல காலத்தில் தம்மை அந்நிலைமைக்கு அதிகரிக்கச்செய்து ஆசீர்வதித்த அன்புள்ள ஆண்டவரை அகத்தினில் ஆராதித்து அவரது அன்பை அனைவர்முன்னும் அறிவித்து வருவார்.

அய்யாபிள்ளை தாம் தசணீக்கத்த தொழிலில் தரித்திருந்தபோதிலும், தேவனுக்கேற்ற திவ்விய ஊழியத்தைத் திடனைப்புரிய தேறின மனம்கொண்டார். நாகை



யில் கோவிலுக்கு வேகமாய்ப் போவார். ஜாகையில் தேவனை ஜெகமகிழச்செய்வார். நாட்டிலே கர்த்தரின் வீட்டைநோக்கிச் செல்வார். வீட்டிலே விண்ணவனைப் போற்றியே புகழ்வார். தேவாலயத்தில் தேவனை ஆவலாய்ப் பிரார்த்திப்பார். தன்னகத்தில் முன்னவனை எந்நேரமும் எண்ணுவார். லுத்தரன்சபை சுத்தமாயிராத எத்தனையோ இடங்களில் இளைஞர் அய்யாபிள்ளை இருக்கநேரிட்டிருந்தது. அப்படிப்பட்ட இடங்களில் எப்படிப்பட்ட சபைகள் அப்போதிருந்ததுண்டோ தப்பாமல் அச்சபைகளின் ஆராதனை அனைத்தையும் ஆவலுடன் அநுசரிப்பது அய்யாபிள்ளையின் அதிபால்ய ஆசாரம். கூடஊர் சர்ச்சுசபை கோவிலில் அய்யாபிள்ளை எச்சமயமும் இருப்பார். *நாகையில் வெஸ்லியன்சபையின் நிசமான அவயவம் அய்யாபிள்ளை. எந்த ஸ்தலத்தில் எந்தச் சபை இருந்ததோ அந்தச் சபைக்கு இவர் சொந்த அவயவம்.

சகல கிறிஸ்தவ சமயங்களுக்கும் சமாச அவயவமாயிருந்தது சரியல்லவென்று கண்டு, அச்சங்கடத்தைத் தவிர்க்கும் சமயத்துக்காக ஏங்கி, தாங்கையில் திரும்பவும் தலையெடுத்த தமது தாய்ச்சபையாகிய சுத்த சுவிசேஷ லுத்தரன் சபையைப் பட்டணம் நாகையில் பட்சமாய் ஸ்தாபிக்க இஷ்டமனம்கொண்டு கர்த்தரை முன்னிட்டு மெத்தவும் முயன்றார். அய்யாபிள்ளையின் அதிபிரயாசத்துடன் அய்யனின் ஆசீர்வாதமும் மெய்யாய்க் கூடியிருந்ததால், தாம் செய்யத் துவக்கினதைத் தொய்யாமல் நடத்தி, தூய்ய லுத்தரன்மிசியோனை நல்ல மனதுடன் நாகைக்கு 1862-ம் வருஷம் வரவழைத்தார். அத்தருணத்திலிருந்து பக்தியில்மிகுந்த லுத்தரன் குருக்களும் தங்கள் சொந்தப் பிரயாசையின்றி கனகப்பபிள்ளையின் கனத்த உழைப்பின் பலனால் தங்களுக்குத் தத்தமாய் அளிக்கப்படும் புத்தம் புதிய சபையை அதிக ஆசையுடன் அங்கீகரித்து ஆராதனையை ஆசரிக்கும் ஆடுகளாக்கிக்கொண்டனர். அதுகாலம்வரையில் அந்நிய

சபைகளின் ஆராதனைக்கு அவனுடன்போன அய்யாபிள்ளை அப்போது ஆங்கிலச்சபையின் ஆராதனைக் கேட்டு அகமகிழ்ந்தார். கனகப்பபிள்ளை களிகூர்ந்து தம் கையால்கூடிய கனத்தஉதவிகள் யாவையும் கோவிலுக்கென்று குறைவற செய்துவந்தார்.

ஊத்தரன் சபையை மெத்தவும் பெருகச்செய்வதும், தம் இனத்தார் யாவரையும் கனத்த வேலைகளில் வைப்பதும், கிறிஸ்தவர்யாவர்க்கும் பொருந்த உத்தியோகம் செய்விப்பதும், எல்லாவற்றிற்கும் மேலாகப் புல்லறிஞனாகிய தம்மைச் செல்வந்தராக்கிய வல்லவருக்கு ஓர் நல்ல ஆலயத்தை நாட்டிவைப்பதும் அச்சமயத்தில் அய்யாபிள்ளைக்கு அகத்தினில் உதித்த அன்பான ஆசைகள். அய்யாபிள்ளை ஆசித்த காரியங்கள் அணுஅணுவாய் அமைவுபெற அவரை நேசித்த கர்த்தர் நோக்கத்தையும் தீரத்தையும் வேண்டியமட்டும் தந்து விரும்பி ஆசீர்வதித்தார். இந்நோக்கங்களுக்கிசைய அய்யாபிள்ளை இனத்தாரை வரவழைத்து இஸ்டோரில் (Store) எழுதச்செய்து ஏகசபையின் தொகையை ஏறச்செய்தார். சனத்தாரை வரவழைத்து, சகல உதவியையும் புரிந்து, சரியான உத்தியோகங்களில் உறுதிப்படுத்திச் சபையைத் தழைக்கச்செய்தார். கர்த்தரில் ஸ்நானம்பெற்ற கிறிஸ்தவர் எவரையும் மெத்தவும் உபசரித்து, அத்தம் கல்விக்கேற்ப தகுந்த வேலைகளில் தக்கபடியமர்த்தி, ஊத்தரன் சபையின் லக்கத்தை உயர்த்தினார். இத்தகைமையாய், கைப்பொருள் செலவழித்தும் கனத்த வேலைகள் செய்துவித்தும் கர்த்தரின் சபை பெருக கடும்பிரயாசைப்பட்டார். ஐம்பது ரூபாய் சம்பளமும் அய்யாபிள்ளையின் அதிதாராளமான அன்புநிறைந்த தன்மைக்கு அதிக சொற்பமென்று கண்ட ஆண்டவர் கனகப்பபிள்ளை இன்னமும் கனத்த தனவானாக கிருபை பொழிந்தார்.

1865-ம் வருஷம் அய்யாபிள்ளை ரெயில்வேலையை ராஜியாகவிட்டுவிட்டார். இஸ்டீமர்களுக்கு ஏஜென்ஸி



(Steamer Agency) வேலையானார். ஐரோப்பாக்கண்டத்துப் பேரான சரக்குகளை நேராக வரவழைத்துச் சீரான வியாபாரத்தைச் சிறப்பாய் நடப்பிக்கத் துவக்கினார். ஆண்டாபிள்ளை செட்டியார் அண்டு கம்பெனி என்ற (Messrs. Andapillay Chettier & Co.) கூட்டு வர்த்தக ஷாப்பில் பங்காளியாகவும், அத்துடன் அதன் மானேஜராக ஐம்பதுரூபாய் சம்பளத்திலும் பெருத்த வியாபாரத்தைப் பேர்விளங்க நடப்பித்துவந்தார். புத்தியில் தேர்ந்து சக்தியில் சிறந்து சாகும்வரையில் சோம்பல் என்பதை அறியாத அய்யாபிள்ளை இத்தனை வேலைகளுடன் கவர்ன்மெண்ட் கட்டடங்களின் கனத்த கண்ட்ராக்டராகவும் (Government Contractor) இருந்தார். உண்மையாய் உழைத்த அய்யாபிள்ளையின் ஊக்கத்துக்கு உதவிநின்ற ஒரேபராபரனும் அந்நிலைமையிலே அய்யாபிள்ளையை அதிகமதிகமாய் ஆசீர்வதித்தார். வியாபாரத்தால் விளைந்த வருமானங்கள் வெகு மிகுதியாயின. இஸ்டீமர் ஏஜென்ஸியால் ஏற்பட்ட லாபங்கள் ஏராளமாயிருந்தன. கட்டட கண்ட்ராக்டினால் கைக்கெட்டின துட்டுகள் குறையற்றிருந்தன. கனகப்பபிள்ளை தனவானானார். அய்யாபிள்ளை ஐசுவரியவானானார். தன்னைத் தேடிவந்தோருக்கு நன்மைசெய்வதில் இன்னமும் தேறினார். கோவில்காரியங்களுக்குக் குறைவறக் கொடுக்கக்கூடியவரானார். கூடகோபுரமும் மாடமாளிகையுமுள்ள மூன்று கட்டுகளுடன் நன்றாய் அமைக்கப்பெற்ற மூவாயிரம்ரூபாய் மதிப்புற்ற முதல்தரமான வீடொன்றைக் கட்டினார். கட்டின வீட்டைப் பஜனைப் பிரதிஷ்டைசெய்து, இஷ்டர்கள் யாவர்க்கும் இனிய விருந்தளித்து, தாமும் தமது இரு தமையரும் அவரவர் தம்தம் சமுசாரம் பிள்ளைகளுடன் ஒவ்வொருவர் ஒவ்வொரு தனிக்கட்டில் செவ்வையாக குடியேறி சிநேகத்துடன் வாழ்ந்திருக்கச்செய்தார்.

அய்யாபிள்ளை ஊத்தரன் சபையை நாளைக்கு வரவழைத்தார், கர்த்தரை அகமகிழ்ந்து ஆராதித்தார்.

பந்து ஜனத்தை வருந்தி அழைத்தார், தந்து வேலைகள் தழைக்கச்செய்தார். வந்த கிறிஸ்தவர்களை எந்த விதத்திலும் உபசரித்தார். ஆனால் அய்யாபிள்ளையை ஆசீர்வதிப்பதையே தமது வேலையாய்க்கொண்ட மேலவனுக்கு ஆலயமொன்றைச் சிலமாய்க் கட்டத்தக்க சீருக்கு இவர் இன்னம் வந்ததில்லை. இன்புற்ற எருசலேம் நகரில் தமக்கென்றோர் ஆலயத்தைத் தகுந்தபடி கட்ட நினைத்த தாசன் தாவீதைத் தடுத்து அவனுக்குப்பின் அரசனான அவன் மகன் சாலமோனால் அழகிய ஆலயத்தை அமைத்துவைக்க ஆவல்கொண்ட ஆண்டவர், நாகையில் தமக்கேற்ற ஜாகை ஒன்ற நண்பன் அய்யாபிள்ளையின் நாட்களில் நாட்டப்பட விரும்பி அய்யாபிள்ளையை அதற்கேற்ற அதிகாரஸ்தரும் ஆஸ்திபந்தருமாக்கக் கருதி அதிகமதிகமாய் அவரை ஆசீர்வதித்தார். அய்யாபிள்ளையும் உத்தியோகத்தில் எவ்வளவுக்கு அதிகமாய் உயர்ந்தாரோ, பக்தியிலும் அவ்வளவுக்கு அதிகமாய்ச் சிறந்தார். கர்த்தர்பேரில் கவிகட்டுவதே அவர் நித்தம் செய்யும்வேலை. பஜனைகள் வைப்பதும், நிஜஸ்தனை துதிப்பதும், கச்சேரிகள் கூடுவதும், அர்ச்சயன்மேல் பாடுவதும் அய்யாபிள்ளையின் ஆதிவார அலுவல்.

படிப்பினை.

"மெய்க்கிறிஸ்தவன்
எல்லா விதத்திலும் நன்மை செய்கிறான்,
எல்லாருக்கும் நன்மை செய்கிறான்,
எல்லா நேரமும் நன்மை செய்கிறான்,
எல்லா இடத்திலும் நன்மை செய்கிறான்."—ஞா. தோ.



## 4. அரிய அலுவலில் அமர்ந்ததும் திரியேகர் ஆலயம் அமைந்ததும்.

1868-ம் வருஷம் சீர்பெற்ற சென்னையின் சிறந்த பாங்கியின் பிராஞ்சொன்று (Branch of the Bank of Madras) பேர்பெற்ற சின்ன ரெயிலின் பிரதான நகராகிய பட்டணமும் நாகையில் பாங்குடன் ஸ்தாபிக்கப்பட்டது. கடல்தங்கிய நாகையில் கனத்த வியாபாரியாகவும் கனபுருஷராகவும் கனமாக எண்ணப்பட்ட கனகப்பன் அய்யாபிள்ளை அப்பாங்கியின் காரியங்களைக் கவலையுடன் நடத்தத்தக்க காஷியரானார் (Cashier). புண்ணிய அய்யாபிள்ளையின் சம்பளம் நூறு ரூபாய். அய்யாபிள்ளையின் அன்பு அதிகரித்தது. கனகப்பபிள்ளையின் காருண்ணிய சிந்தை கடலிலும் கடந்ததாயிற்று. லூத்தன் மிசியோனின் உத்தம ஊழியனின் உபகாரம் ஓங்கி உயர்ந்தது. தளர்ந்துவந்தோரைத் தாங்கி உபசரிக்கும் தயாளதன்மை தடைகளற்றது. அய்யாபிள்ளை அய்யனின் பிள்ளையானார். கனகப்பபிள்ளை கர்த்தரின் பிள்ளையானார். விரும்பிக் கேட்ட இனத்தார் யாவரின் விவாக காரியங்களுக்கும் வேண்டிய பணம் தாமே செலவழித்து அவைகளை வேடிக்கைகளுடன் நடத்தினார். உத்தியோகத்தில் அய்யாபிள்ளை காண்பித்த ஊக்கம் ஊரெங்கும் பேசப்பட்டது. பாங்கி வருஷாவருஷம் வரும்படியில் விர்த்திபெற்று வகுப்பில் உயர்ந்தது. அய்யாபிள்ளையின் அறிவும் சாமர்த்தியமும் அவரது மேலானோருக்கு அறிவிக்கப்பட்டது. நூறாயிருந்த சம்பளம் நூற்றிருபத்தைந்து ஆயிற்று. அய்யாபிள்ளை தாம் அநேக நாட்களாய் ஆசித்திருந்தபடி அநேக ஆயிரக்கணக்கான ரூபாய்களை அன்புடன் செலவழித்து, நாகையில் அரிய வீதியாகிய டச்சுக்காரர் ராஜவீதியில் (Holland Street) அழகான ஆலயமொன்றை ஆவலுடன் கட்டிமுடித்தார். 1872-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் 3-ம் தேதி சுத்த சுவிசேஷ லூத்

தான் மிசியோன் பத்தியுள்ள குருக்களை எத்திசையானுமிருந்து எழுதி வரவழைத்து, கர்த்தருக்கென்று கட்டியகனத்த தேவாலயத்தைக் கனகப்பன் அய்யா பிள்ளை தத்தமாய்த் தந்தார். பத்துவருஷத்துக்குமுன் அய்யாபிள்ளையால் அளிக்கப்பட்ட அன்பான சபையை ஆவலுடன் அங்கிகரித்த லுத்தரான் குருக்கள் இப்போதளிக்கப்பட்ட அப்புரவான தேவாலயத்தையும் ஒப்பினமனதுடன் தப்பாமல் பெற்றுக்கொண்டு திரியேகநாதர் ஆலயம் என்னும் திவ்ய நாமம் சூட்டி சிறப்புடன் பிரதிஷ்டைசெய்தனர். *திரியேகர் ஆலயம் திருப்பிரதிஷ்டையானபோது அன்பர் அய்யாபிள்ளை ஆநந்தித்துப்பாடிய அருங் கீர்த்தனமாவது:—

### ஆலயப் பிரதிஷ்டை கீதம்.

இராகம், சங்கராபரணம். ஆதிதாளம்.

(† ஒத்த இராகம்:—"ஏக நாயகா வந்தாளுந்,"—ஞா. கீ. *)

பல்லவி.

ஆசீர்வாதமே தந்தாளும், அத்தா எந்நாளும்.

அனுபல்லவி.

ஆசீர்வாதந்தனைக்கோரும்—நேசசபைக் கின்றுகாரும்.—ஆசீர்.

சரணங்கள்.

1. நிற்பராவுன் சத்யமறை—தரையிற் போதிக்கும் முறை
சற்போத உத்தர்சங்கங் கண்பாரும்—நின்தயை
கூரும்.— ஆசீர்.
2. அற்புத விச்சைபகிலைக்—காதரவாங் கல்லாகியந்தலை
நற்புத்திரரையுன் வழிக்காரும்—நின்வரங் கூரும்.—ஆசீர்.
3. தந்தையைப்போலடியர்க்கு—தயைபுரி போதகர்க்கு
பந்தசுகம் பலனையுந் தாரும்—பற்பலவாறும்.— ஆசீர்.

† ஒத்த இராகங்கள் சில பாடல்களின் இராகங்களுக்கு முழுவதும் இசைந்திரா.

* கீர்த்திபெற்ற தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் பாடிய பாடல்கள் அடங்கிய "ஞானக் கீர்த்தனைகளின்" புத்தகம்.



4. நாகையிலுமைத் துதிக்க—நாடினருளம்மகிழ்க்க
ஜாகையொன்றைத் தந்த சருவேசா—கருணையீசா,—ஆசீர்.
5. ஆயிரத்தெண்ணூறுஞ்சென்று—அறுபன்னிரண்டாமாண்டு
கோயிலொன்றைச் சொந்தமாய்க் கொடுத்தாய்—குறை
தடுத்தாய்.— ஆசீர்.

* அய்யாபிள்ளை அமைத்துவைத்த இவ்வாலயம் அவரை அறிந்தோர்க்கு நினைப்பூட்டி நிற்கும் ஞாபகஸ்தம்பம்.

படிப்பினை.

"காசு வேண்டுமானால் காலத்தைப் பிடித்துக்கொள்,
கீர்த்தி வேண்டுமானால் கிரியையில் பெருக,
அருள் வேண்டுமானால் அமலனைத் தொழுதுகொள்."—
[ஞா. தொ.

## 5. தேவனை மறந்ததும் பாவங்கள் புரிந்ததும்.

சந்திரப்பாடி கிராமத்தில் சொந்தச் செல்வமற்று எந்த விதத்திலும் ஏழையாய்ப் பிறந்த அய்யாபிள்ளை தம்மை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்த கர்த்தரை இதுமுதல் என்றைமல் மறக்கத் துவக்கினார். பூலோக

* ஜர்மன் தேசத்து லைப்சிக் மிசியோன் பத்திரிகை (1872-ம் வருஷம் அக்டோபர் மாத நம்பரில்) கனகப்பன் அய்யா பிள்ளை கர்த்தருக்கென்று நாகையில் சுத்தமான ஆலயத்தைக் கட்ட மெத்தப் பிரயாசை எடுத்து அதைத் தத்தமாய்த் தந்தவ ரென்றும், சமய உசித யுக்தியினால் காரைக்காலிலிருந்த ஓர் பிராமணரைப் பெரிய ஆபத்திலிருந்து நிவர்த்திசெய்து அவரிடத்திலிருந்து ஆலயக்கட்டட அமைப்புக்கென்று ஆயிரம் ரூபாய் சம்பாதித்த அதிபூதியான மிகவிவேகியென்றும் மேன்மையாய் முழங்குகிறது.

தரங்கை மிசியோன் அருணோதயம் (1872-ம் வருஷம் மே மாத நம்பரில்) பிரபு அய்யாபிள்ளையின் பெரிய உதவியைப் பிரஸ்தாபித்துப் பேசுகிறது.

செல்வச்செருக்கைத் தம் மேலோக செல்வப்பெருக்காகவும், பாவ லோகப்பொருளைத் தம் ஜீவ அகஅருளாகவும் மதிக்கத் தொடங்கினார். பொன் கிண்ணியைப் பெற்ற அய்யாபிள்ளை தமது முந்தின மண் கிண்ணியை முற்றிலும் மறக்கலுற்றார். மச்சுவீட்டைக் கண்ட கனகப்பபிள்ளை தம் குச்சுவீட்டைக்குறித்துக் கொஞ்சமும் கருதாது கனவிலும் மறந்தார். காஷ்கிப்பர் கனகப்பபிள்ளை துவேஷ்டையான தூர்க்கிரியைகளைத் தொடர்ந்து நடத்த துவக்கம்செய்தார். அக்காலத்தில் அய்யாபிள்ளையின் அன்ன நடையையும், வன்ன உடையையும், மின்னும் இடையையும், கர்ண குடையையும் தன்னை மறந்து தற்பெருமையில் தழைக்கும் தரணியோரின் எச்சரிப்புக்கென்று என்னால் கூடியமட்டும் எடுத்து எழுதுகின்றேன்.

மல்லுப்பாகையை எறிந்தார், மெல்லிய சல்லாப்பாகையை அணிந்தார். அற்ற காதைத் துளைத்தார், உயர்வு பெற்ற கடுக்கனை நுழைத்தார். காசர் கச்சைகளைக் களைந்தார், பேஷான உடைகளைப் பிடித்தார். கருக்கான ஜோடுகளை முறுக்குடன் மாட்டிக்கொண்டு பெருக்கமான கூட்டங்கள்முன் கனசெருக்குடன் நடப்பார். துல்லிதமான வாழைஇலைதனைத் தொல்லை என்று துலைத்து வெள்ளியினால் வேலைதீர்ந்த துல்லியத் தட்டுகளில் தம் பல்வகை பதார்த்தமுள்ள சல்லாபச் சாப்பாட்டை அல்லலின்றி அருந்துவார். பித்தளைப்பாத்திரம் எத்தனை சிறந்தும் சுத்தமாய் அவர் கண்முன் வைத்திடச் சகியார். வெள்ளிப் பாத்திரங்களையே விரும்பி உபயோகிப்பார். கனகப்பபிள்ளை கல்லிழைத்த கனமான மோதிரங்களை இரு கரங்களின் விரல்களிலும் கண்யமாய் அணிந்துகொள்வார். இரட்டைக்குதிரை சாரட்டை இட்டமுடன்கட்டி நாகபட்டண தெருக்களில் கண்எட்டின இடமட்டும் தட்டாமல் விட்டடிப்பார். எந்தக் காலத்திலும் சந்தனத்தைச் சடலத்தில் சம்பிரமமாய்ப் பூசியிருப்பார். எவ்வகை வாசனையும் சவ்



வாதும் புனுகும் திவ்வியமணம்போல அவர் தேகத்தில் வீசும். பொன் அரைஞாண் ஒன்றை நன்னயமாய்ச்செய்து தன்னரையில் மின்னும்படி தரித்தார். இங்கிலீஷ் சாராயத்தில் இங்கிதமான தினுசுகளை எங்குமிருந்து வரவழைத்து, தம் தங்கமான தேகத்தை அவற்றின் பங்கமான ஆளுகைக்குக் கீழ்ப்படுத்துவார்.

தீபமேற்றினதும் தீரமாய்ப் பாடும் தாசிகளை அழைப்பித்து, அவரது தேனான சிற்றின்பத் தில்லானாக்களைத் தினந்தோறும் கேட்டு அகத்தில் ஆநந்திப்பார். எந்தவூர் தாசியும் முந்த அய்யாபிள்ளையின் சொந்த வீட்டுக்குவந்து அர்த்தமான இராகங்களில் அமைக்கப்பெற்ற சுந்தரமான சந்தங்களை சங்கீதமெட்டுடன் இங்கிதமாய்ப் பாடுவாள். அக்காலத்தில் துலக்கமான வேடிக்கைகளை மனக்கலக்கமின்றி பார்க்க விரும்பியோர் விளக்குவைத்ததும், உலகர் அய்யாபிள்ளை வீட்டுக்கு ஓடிவருவது சகஜம். நாகையிலோர் நாடக நாட்டியர் வந்ததும் வேகமாய் வேடிக்கையை வெளியில் எங்கும் காட்டாமல், வாகான அய்யாபிள்ளையின் ஜாகையில் முந்த ஆடி, அதற்குப் பிந்திதான் அப்புறங்களில் ஆடுவது அப்போதைய வழக்கம். தாசிகள் நேசமும், சங்கீத விசேஷமும், உலக உல்லாசமும், சகல ஆசாபாசமும் அய்யாபிள்ளையின் அநுதின அகசகவாசம்.

ஆதிவாரம் வந்ததும் ஓதிப் பிரசங்கிக்கும் வேதியன் ஆலயத்தைத் தீதாய் மறந்து, காதவழி கடந்து கோதையர் சங்கத்தில் கும்மாளமாய்க் குந்திக்கொண்டு கீத வாத்தியங்களின் நாதங்களைக் கேட்டுப் பேதமாய்த் தம் ஆத்துமத்தைச் சேதமாக்கிக்கொண்டிருப்பார். கோவில் மணிகேட்டு ஆவியில் கலங்குவார். போதகம் கேளாமல் காதவழி சவாரிசெய்வார். ஆலயம் போகாமல் அங்கும் இங்கும் ஏகுவார். வேசிகளின் வீடுகளுக்கு நேசமுடன் போவார்.

ஒவ்வொரு இரவும் திவ்வியமாய்ப் பாடத்தகுந்த செவ்வை புருஷர் இருவரை ஒவ்வியமாய் ஏற்படுத்தியிருந்தார். ஒன்பதுமணி இரவில் இன்பமான சங்கீதங்களைத் துன்பங்களற கேட்ட அன்பர் அய்யாபிள்ளை கச்சேரியைக் கலைத்து, கச்சிதமாய்ச் சமைக்கப்பெற்ற உச்சித உணவுகளை அச்சமயம் அகத்தில் இருக்கும் நிச்சய நண்பருடன் பட்சமுடன் அருந்தி படுக்கைக்குப் போவார். பாங்கியின் கூஷியர் அய்யாபிள்ளை பட்டு மெத்தைமீதினில் பாங்குடன் படுத்ததும், கால்பிடிப்போர் ஓர்புறமும், கரம்பிடிப்போர் ஓர்புறமும், பதம் படித்து வீணைகரம்பிடித்து இதமாய் நித்திரையை நிதம்வரவழைத்துத்தரும் வித்வ பிராமணன் ஓர்புறமும் கூடி, அவரவர் தம்தம்வேலையைத் தன்மையுடன் நடத்துகையில், கனகப்பபிள்ளை கண் உறங்குவார்.

காலையில் எழுந்ததும் அய்யாபிள்ளை கடன்களை முடித்துக்கொண்டு அன்பான ஆர்மோனியம் என்னும் கின்னரத்தில் இரண்டொரு பாடல்களை இன்பமாய்ப் பாடி வாசிப்பார். பின்பு அரைவாசி வேகவைத்த அரைடசன் முட்டைகளை அன்புடன் அருந்தி, காலை ஐந்துமணி சமயத்தில் அழகிய பீட்டன் வண்டியில் அதிகாலை சவாரிசெய்து அருமை சிநேகிதர் ம-ள-ள-ஸ்ரீ ஆண்டாபிள்ளை செட்டியார் அவர்கள் வசித்த வாசான நாகூருக்கேகி, ஆறரைமணி சுமாரில் அவ்விடமிருந்து திரும்பி வெளிப்பாளைய தோட்ட பங்களாவில் கொஞ்சநேரம் தங்கி, பிஞ்சும் பூவுமான பலவகை மரக்கறி பதார்த்தங்களை ஏற்றிக்கொண்டு மருங்காய் வீடுவந்து சேர்ந்து, கட்டு மூன்றுவதில் கண்யமாய் இருந்துகொண்டு, காய்கறிபதார்த்தங்களைக் கத்தியினால் அறிந்து தந்து, மடைப்பள்ளியின் மராட்டியருக்கு இடையில் ஏற்ற யுத்திகள் சொல்லுவார்.

பத்துமணி சுமாரில் கத்தியை எறிந்துவிட்டு உத்தியோக நினைப்பெடுத்து நித்ய ஸ்நானத்தை நேர்மையுடன் நடத்தி, இங்கிலீஷ் சாராயத்தில் ஏற்ற அளவு எடுத்



துக்கொண்டு, அறுவகைப் பதார்த்தங்களையும் அன்புடன் அருந்தி, அந்தந்த நாளுக்குரிய சொந்த வெண்வஸ்திரம் தரித்து, சவானில் செய்யப்பெற்று இரட்டைசரட்டில் கோத்திருந்த தங்க கெடியாரத்தைத் தன்மையுடன் தரித்துக்கொள்வார். பின்னும் பலவகை வாசனைதிரவியங்களுள்ள இருவகைப் பெட்டிகளையும் இன்பமாய்த் திறந்து, அவைகளிலுள்ள கண்ணாடிகளில் தம் முக அழகைப்பார்த்து, பற்பல சீசாக்களிலுமிருந்து சிற்சில துளிகளைத் தம் சீரான உடைகளின்மேல் தெளித்துக்கொள்வார். செட்டியார் இவ்வகையாய்ச் சிங்காரித்துக்கொள்வதற்குள் பட்டணம் பரிபோகுமாப்போல, மணி 12, 12½ அல்லது 1-ம் ஆகிவிடும். இதற்குள் சொந்த வீட்டுக்கூடம் ஜனசந்தைக்கூட்ட இடமாகும். திண்ணைகளிலெல்லாம் எண்ணிலில்லா கும்பலாகும். எதிர்வீட்டுத் திண்ணைகளில் மண் அதிரத்தக்க ஜனம் கூடும். பக்கத்துவீட்டுத் திண்ணைகளில் பலர் பக்கம் பக்கமாய்க் கூடியிருப்பார். பிரதிதினமும் பெரிய கூட்டமான ஜனம், பிரபு அய்யாபிள்ளையின் பெருத்த வருகைக்காக காத்துக்கொண்டிருப்பார்கள்.

அய்யாபிள்ளை முதற்கட்டுக்குள் பிரவேசித்து, வந்திருக்கும் எல்லா மனுஷருக்கும் தம் இரு கரங்களையும் கூப்பி வந்தன ஸ்தோத்திரத்தைச் செலுத்தி, முந்தியே தெருவில் வந்து நிற்கும் பீட்டன், பக்கி அல்லது கோச்வண்டியில் பிந்தாது ஏறி, ஐந்துநிமிஷத்துக்குள் பாங்கிக்குப் போய்ச் சேர்வார். வந்த பெரியோர் யாவரும் கும்பல கும்பலாய் நடந்து சீரான பாங்கிக்கு நேராகப் போய்ச் சேர்ந்து, தங்கள் அரிய வேலைகளை அய்யாபிள்ளையால் ஆகப்பண்ணிக்கொள்வார்கள்.

இவைகள் எல்லாம் அய்யாபிள்ளையின் அநுதின அநுபவ ஜம்பங்கள். இராக்காலங்களை தாசிகள் கச்சேரிகளிலும், வேசிகளின் வீடுகளிலும், நாடகசாலைகளிலும் சிற்றின்பப் பிரியராய்ச் செலவழித்துவந்தார். சபையை ஸ்தாபித்த அய்யாபிள்ளை அபாய ஆத்ம நிலைமைக்குள்

ளானார். கோவிலைக் கட்டித்தந்த கனகப்பபிள்ளை ஆவியில் எட்டிவிலகினார். பஜனைவைத்த அய்யாபிள்ளை பரம எஜமானை மறந்தார். பக்தியில் ஓங்கிய அய்யாபிள்ளை முற்றிலும் அதைவிட்டு நீங்கினார். எத்தனையாய்ப் பொன்மங்கி நல்ல தங்கம் மாறிப்போயிற்று (புலம்பல். 4: 1.) என்று புலம்பத்தக்கதாய் அய்யாபிள்ளையின் ஆத்ம நிலைமை மெய்யாகவே அதிபாதாப நிலைமையாயிற்று.

படிப்பினை.

“பொருள் நஷ்டம் சிறு நஷ்டம்,
சுக நஷ்டம் வெகு நஷ்டம்,
கீர்த்தி நஷ்டம் பூர்த்தி நஷ்டம்,
ஆத்ம நஷ்டம் அளவில்லா நஷ்டம்.”—ஞா. தெ.

## 6. புடமிடப்பட்டதும் உடன் குணப்பட்டதும்.

பாசமாய்த் தம்மை நேசித்த கர்த்தரைப் பூசித்ததை நிறுத்தி, வேசைகள் நேசத்தால், உலக உல்லாசத்தால், சகல சல்லாபத்தால் சிக்கப்பட்டு மறந்ததால், அய்யாபிள்ளையின் அக்கிரமங்களை அரோசித்தும், அய்யாபிள்ளையைத் தமது சொந்தப் பிள்ளையாய் நேசித்த எசுகர்த்தர் அவரைத் திரும்பவும் தம் வசமாக்கக் கருதி பெருத்த துன்பங்களை ஒறுத்து அனுப்பி தம்மை வெறுத்த அய்யாபிள்ளையைத் திருத்தும்படி கருத்துக்கொண்டார். மாய்கையிலே சிக்குண்டு மருகின மானைப்போல மனம்போன வழி திரிந்த மகாராஜர் அய்யாபிள்ளைக்கு, அவர் ஜாகையிலே சம்பிரமமாய்ச் சிற்றின்ப செருக்குகளில் செழித்திருக்கும் சமயத்தில் சற்பனையை யோசித்த சமய சத்துருக்கள் அநேகரை சர்வஞானமுள்ள கர்த்தர் சரியாய் எழுப்பிவிட்டார்.



கிறிஸ்தவன் இவனுக்குக் கீர்த்தி இவ்வளவு கிருபையாய்க் கிடைத்ததே என்று கிலகம்பேசும் கிறிஸ்தவ தம்பிகள் ஒருபுறமும்,

அன்று அறியாத பிள்ளைகளுக்கு ஆனா ஆவென்னவை அடித்துப் படிப்பித்த அய்யாபிள்ளைக்கு ஆஸ்தியும் அதிகாரமும் ஆட்கள் பாட்டும் அன்றுடக அதிர்ஷ்டமும் ஆறுபோல் பெருகுதே ஆஆ என்று அகத்தில் அகங்கரிக்கும் ஆற்றாமைக்காரர் ஒருபுறமும்,

பிரபுக்கள் நாங்களிருக்க, தாணி நாகையில் ஒருவருக்கும் கிடைக்காத பெரும்பேறைப் பெற்றுத் திறமான கவர்னரைக் கிருடிக்கொண்டுபோம் ஓரே பெரும் பிரபுவாய் ஊரில்வற்பட்ட இவனைத் திரணமும் வைக்காது தாக்கிஇளைப்பாறுவோம் என்று காமாய்ப் பேசிய பிரபுக்கள் ஒருபுறமுமாக.

எவ்வகைப்பக்கமும் பல்வகைச் சத்துருக்களும் எழும்பினர். இந்தத் துர்க்காலத்தில் தொந்தமாய் யாவரும் சந்துசந்தாய்க்கூடி கந்தலான ஓர் பொய்க்கேசை பந்தோபஸ்தாய் ஜோடித்தார்கள். அய்யாபிள்ளையை முந்த தஞ்சாவூர்ஜில்லா கலெக்டரும் பிந்தி தாங்கை செஷன் கோர்ட்டு ஜட்ஜுமா விசாரித்தார்கள். சாற்றப்பட்ட குற்றம் பொய்க்குற்றம், ஆனால் இது காரியத்தில் நீட்டப்பட்ட கரமோ தேவகரம். எல்லாமறிந்த வல்லபராபரன் நல்லவர் அய்யாபிள்ளையின்மேல் சொல்லொதார் சொணர்ந்தது இல்லாத கேசென அறிந்தும், தொல்லையொன்றுமின்றி அல்லல்களை அகற்றிவிடாமல், அய்யாபிள்ளை மெய்யாய்க் குணப்படவும் வையகத்தின் பொய்யான வாழ்வைவிட்டு இனி தூய்யனாய்த் துலங்கவும் கருதி, கொஞ்சக்காலம் அவரை நெஞ்சம நொருங்கி நெஞ்சம்படிவிட்டு நியாயாதிபதியின் அநியாயத் தீர்ப்புக்கு அமைந்திருந்தவர்போல காண்பித்தார். சர்ச்சன நியாயாதிபதிக்கு அட்சண குற்றவாளி அய்யாபிள்

ளை *லட்சாதிபதியென்று மிச்சமானபோரால் நிட்சயமாய் அறிவிக்கப்படவே, அட்சணமே அத்துரை ஓராயிரங் குறைய கால்லட்சம் ரூபாயைப் பட்சமான அபராதமாக ருட்சமாய் விதித்தார். ஆனால் இத்தெண்டத்தைக் கொண்டுபோய்த் தண்டலையைத் தீர்க்காவிடில், மூன்றொன்பது மாதகாலம் நன்றான தாங்கை ஜெயிலில் கொண்டுபோய் அடைக்கவும் தீர்ப்பிட்டார். இத்தீர்ப்புக்கிணங்க கர்த்தரை மறந்த கனகப்பபிள்ளை மெத்தவும் மெய்மனஸ்தாபப்பட்டதக்கதாய் கடுஞ்சிறைக்கு— பட்டார். அப்போது அவர் தம்மை அடைத்திருந்த பங்கேகாளைவைப்பார்த்து அதில் தாம் படித்த பாடங்களைப்பற்றிச் சிறப்பாய்ப் பாடியதாவது:—

## ஜெயில் சிறப்பு கீதம்.

இராகம், நாதநாமக்கிரியை. ரூபகதாளம்.

(ஒத்த இராகம்:—"தெய்வம் இவர், தெய்வம் இவர்."—ஞா. கீ.)

பல்லவி.

சாலையிது சாலையிது
சருவகலா சாலையிதுதானே.

சரணங்கள்.

1. வேலைசெய்ய விதமறியா
வீணிருக்கும் சாலையிது
காலைமுதல் மாலைமட்டுங்
களைக்க உழைக்கும் சாலையிதுதானே.— சாலை.

2. அம்பரனினடிவணங்கா
அறிவீனரின் சாலையிது
கம்பகோணந்தனிலே சாற்றி
கதறஅழச்செய் சாலையிதுதானே.— சாலை.

3. கழுத்துமணிகளை அறுக்குங்
கள்ளர்வாழும் சாலையிது
இழுத்து வலுவரி கயிற்றால்
இணைக்கம் புகட்டுஞ் சாலையிதுதானே.— சாலை.

* தட்சணத்துப்பத்திரிகை சத்தியபோதினி (1873-ம் வருஷம் எப்பிரல் மாதம் 4-ம் தேதி நம்பரில் 67-ம் பக்கத்தில்) அய்யர்பிள்ளை லட்சாதிபதியென்று நிட்சயமாய்க் கூறுகிறது.



4. மாதாபிதா சொற்கேளாத
மடையர்கூட்டச் சாலையிது
தோதாயொருவர்க்கேகர்
ஆண்டுதல்செய் சாலையிதுதானே.— சாலை.

5. கன்னம் வழிப்பறி களவு
காங்குரூபர் சாலையிது
கன்னல் கதவுக்கடங்கி
சயனங்கொண்ருஞ் சாலையிதுதானே.— சாலை.

6. வம்புசண்டை வலுபுணர்ச்சி
வதைக்கொலைஞர் சாலையிது
தும்புபூண்ட ஆடுபோல
துடர்விலங்கு சாலையிதுதானே.— சாலை.

7. பெருமையினுலகத்தைப்பேசும்
பேதைகளின் சாலையிது
ஒருமையாய் சகோதரர்கள்
ஒன்றாய்ப்பழகுஞ் சாலையிதுதானே.— சாலை.

அய்யாபிள்ளை அருஞ்சிறையில் அகப்பட்டபின் தமது முந்தின அதிபிரஸ்தாபமான நிலைமையை நினைத்து, எண்ணாதெண்ணி, இருதயங்கரைந்துருகி, தம்மிரு நிலைமைகளுக்குமிருந்த வித்தியாசங்களைப் பற்றி எழுதிப் பாடியதாவது:—

## முன் பின் நிலைமைகளின் வித்தியாசங்கள்.

1.

இராகம், மலையாபி. ஆதிதாளம்.

(ஒத்த இராகம்:—"ஐயையா நான் பாவி."—ஞா. கீ.)

பல்லவி.

ஜகக்கிருபாகரா!—எனைக்
கிரங்கும் கருணாகரா!—கிரி.

சரணங்கள்.

1. சரகப்பயத்தி சம்சாரக்கவலையால்
சஞ்சலமுற்றதும் பொய்—இப்போ
ஜகப்பிறவியாய் எல்லோரையும்விட்டு
எங்கிமடிவது மெய்.— ஜக.

2. உரிமையென்றெண்ணி இவ்வுலகில் மகிழ்ந்தான்
ஊக்கமாய்வாழ்ந்ததும் பொய்—இப்போ
சிறுமைப்பட்டு உன் சென்னதகலங்கியே
சீர்கெட்டலைவது மெய்.— ஏக.

3. ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல
உற்றுப்பார்க்கில் அது பொய்—இப்போ
பேருங்குலைந்து பிழைப்புந்தவிழ்ந்துமே
பித்தன்போலானது மெய்.— ஏக.

4. தேடியபொருளுந் திரவியமும்பாடுங்
இல்லாறுக்கருமே பொய்—இப்போ
வாடிவதங்கி வகைதெரியாமலே
வறுமைப்படுவது மெய்.— ஏக.

5. கற்றகல்வியினால் கனமும்புகழ்பெற்று
கருவங்கொண்டிருந்ததும் பொய்—இப்போ
சற்றும்மதிப்பில்லா சண்டாளருடனே
சரிபங்கடைவது மெய்.— ஏக.

6. நீசனிருப்பிடம் நிற்கலாகாதென்று
நிந்தனைசெய்ததும் பொய்—இப்போ
போசனமுமொன்று புகலுமிடமுமொன்று
பொருந்துசகிப்பது மெய்.— ஏக.

7. காலிற்சோடில்லாமல் கால்மியில் நடக்க
கால்கூசுதென்றதும் பொய்—இப்போ
வால்தூக்கியோடும் வயிரவனைப்போல
வழிகாதம்போவது மெய்.— ஏக.

8. மெத்தையில்படுத்தும் மிருதுவில்லையென்று
மேல்வஸ்திரங்கேட்டதும் பொய்—இப்போ
கந்தையயிர்கொண்ட கம்பளி ஒன்றினில்
கனதுயில் கொள்வது மெய்.— ஏக.

9. காலையிலெழுந்து கர்ப்பகம் முதல்ய
கண்ணாடி பார்த்ததும் பொய்—இப்போ
சாலையில் பறிக்குஞ் சதிகாரருடனே
சட்டி வழிப்பது மெய்.— ஏக.

10. கோப்பையில் சாதங் குழம்பு கீறிவிட்டுங்
கொள்ள மனமில்லைப் பொய்—இப்போ
கேப்பைக் கூழ்ப்பட்டையை கெஞ்சித்தும் விடாமல்
கெஞ்சிக்கேட்டுண்பது மெய்.— ஏக





11. மூன்றிட மல்லிகை முன்கால் தழைந்திட
முறுக்காயணிந்ததும் பொய்—இப்போ
சாணுவகல சன்னிக்கச்சைத் துணுக்கால்
சடலம் மறைப்பது மெய்.— ஏக.

12. வேலையோனுக்குடை வேனிற்குப்பிடித்து
வெளியில் நடந்ததும் பொய்—இப்போ
பூவாக்கொடிக் கூடை பூரணமன்றோடு
பொருந்து சுமப்பது மெய்.— ஏக.

13. சட்டு வெள்ளிக்கொண்டு காலுக்கு கொலுசு
கண்பார்வைக் கிட்டதும் பொய்—இப்போ
குட்டனின் காலுக்கு துலாமொன்றிருப்பினால்
தோரணம் பூண்டது மெய்.— ஏக.

14. மாணிடக் கல்வியில் மாசமர்த்தனென்று
மார்பெடல் பெற்றதும் பொய்—இப்போ
தான்செய்த வினைக்குத் தக்க விதிகாலன்
தறைந்திட்ட டிக்கட்டு மெய்.— ஏக.

15. வெள்ளிலோட்டாவினில் வெந்நீர் பானஞ்செய்தும்
விடாய் தீர்ந்ததென்றதும் பொய்—இப்போ
கள்ளிறக்கும் குய கலயத்திற்குளிர்ஜலம்
களைதெளிவிப்பது மெய்.— ஏக.

16. பெண்சத்தியிட்டுப் பேருசிவிறற் கைகள்
பெலன் மெலிந்திட்டதும் பொய்—இப்போ
மண்வெட்டிப் பிடித்து மாமட்டைவெட்டியும்
மார்படைக்கவில்லை மெய்.— ஏக.

## 2.

இராகம், முகாரி. சாப்புத்தாளம்.

(ஒத்த இராகம்:—"அன்பினாலே நிறைந்தம்புவி."—ச. ஜீ. *)

1. உலகமாய்சையைவிட்டு
ஊன்றக் கட்டுண்டதும் வெட்கமோ?—இப்போ
பலசவலைவிட்டு
பலவிலங்குண்டதும் துக்கமோ?

2. பெண்மர் பிள்ளைநேசம்
பிரிய இழந்ததும் வெட்கமோ?—தேவ
தண்டனையால் வேஷம்
தரைமட்டுந்தாழ்ந்ததும் துக்கமோ?

* தரங்கை ஞா. சாமுவேல் ஐயர் பாடிய பாடல்கள் அடங்கிய "சுவிசேஷ கீர்த்தனைகளில்" புத்தகம்.

3. பெருமைகொண்ட என்கால்
பெலத்து நடப்பதும் வெட்கமோ?—எந்தன்
அருமை முதுமையிலுன்கோல்
அடியைப்பொறுப்பதும் துக்கமோ?

4. வெய்யிலுக்குக் குடை
வேண்டாதிருப்பதும் வெட்கமோ?—இப்போ
கையிலாயுதங்கூடை
கனக்கச் சுமப்பதும் துக்கமோ?

5. காலைமாலை கணக்காய்
களியைப்புசிப்பதும் வெட்கமோ?—ஐயா
வேலைசெய்து கூட்டமாய்
வேண்டிபடுப்பதும் துக்கமோ?

6. கற்பனைகட்கமைந்து
கனபத்தியஞ்செய்வதும் வெட்கமோ?—சுமை
சொற்பமயில் சுமந்து
சோம்பலுலைவதும் துக்கமோ?

7. நல்லோர்மதிபுகழ்ந்து
நல்லடத்தையுணர்வதும் வெட்கமோ?—இப்போ
புல்லறிவால் மகிழ்ந்து
புத்தியில் தணிவதும் துக்கமோ?

8. சரசக்காரர்பல
சக்கந்தந்துலைத்ததும் வெட்கமோ?—எந்தன்
சிரசின்மேலே தேவ
சிந்தையில் நிலைத்ததும் துக்கமோ?

கனகப்பபிள்ளை தம் கனமான பாவங்களுக்காக கசிந்துயரடைந்து கனிந்துருகி அவைகளைத் தமது அன்பு நிறைந்த ஆண்டவர் முன்னிலையில் அடுக்கடுக்காய் எடுத்துரைத்து அழுது அறிக்கையிட்டுப் பாடிய பாடல்களாவன:—

## பொல்லாப்புகளை நினைத்துப் புலம்புதல்.

1.

(ஒத்த இராகம்:—"பொங்கு தயை கிறிஸ்து."—ஏ. கீ.)

1. என்னபாவங்கள் செய்தேனோ?—ஏசுவின்னன்பை
எற்றாமல் வைதேனோ?
சின்னபின்னம் எய்தேனோ?—சேசு என்னை
சீ:செய் வகையிதுதானோ?



2. கோவில் கதவடைத்தேனோ?—பெருங்
கோபமனம் படைத்தேனோ?
ஆவிபல முடைத்தேனோ?—சேசு என்னை
ஆளும்நல் நடைதானோ?

3. நன்றிகெட்டு மறந்தேனோ?—என் நேசரின்
நாமப்புகழ் துறந்தேனோ?
பன்றியைப்போல் திரிந்தேனோ?—சேசு எனக்கு
பகர்ந்தத் திருவரந்தானோ?

4. பெருமையாண்மை யடர்ந்தேனோ?—கெட்டவனென
பேர்கொள்ளத் தொடர்ந்தேனோ?
வர்ம மாயம் படர்ந்தேனோ?—சேசு என்னை
வளர்த்திடும் பேர் நடந்தானோ?

---

2.

இராகம், சகானா. திரிசரதாளம்.

(ஒத்த இராகம்:—"பஞ்சம் நிவிர்த்தி ஐயனே."—சு. கீ.)

### பல்லவி.

என்ன பாவங்கள் செய்தாயோ? ஏழைநெஞ்சமே!
என்ன பாவங்கள் செய்தாயோ?

### அநுபல்லவி.

பின்னபேதம் எதிர—பித்தன்போல சிதற
முன்னமே,முன்னமே-முன்னமேயுணர்ந்திடாமல்,-என்.

### சரணங்கள்.

1. பூவின்புகழிற் சிறந்தாய்—திரியேகபரன்
பூரணநன்மை மறந்தாய்—ஏழைநெஞ்சமே!
சாவின்கூரதைவெல்ல—சமையம்விட்டாயே நல்ல
தேவனே, தேவனே—தேவனேயென்றுருகாமல்.—என்.

2. இகத்தைச்சதமென்றெண்ணினாய்—அறியாமையால்
இன்பரின் அன்பில் குன்றினாய்—ஏழைநெஞ்சமே!
ஜெகத்தின் இருளைவென்ற—ஜெயமனுவேலன் என்ற
பகலோனை, பகலோனை—பகலோனை நீ நினையாமல்.—என்.

3. ஆடல்பாடல்கள்*சுகித்தாய்—சிற்றின்பமான
ஆசாபாசத்தை வகித்தாய்—ஏழைநெஞ்சமே!
வேடங்கள்பூண்டு வேசி—வீடுயேறி கைவீசி
மூடனாய், மூடனாய்—மூடனாய்த் திரிந்து வீணாய்.— என்.

4. சந்தனஞ்சவ்வாதணிந்தாயே—சாணம்போல் பூசி
சம்பிரமமாகத் துணிந்தாயே—ஏழைநெஞ்சமே!
விந்தைவிநோதம்தினம்—வேலையாய்ச்செய்து மனம்
நிந்தையால், நிந்தையால்—நிந்தையால் மகிழ்ந்து பேயா!—[என்.

தமது எண்ணிறந்த பாவங்களினிமித்தம் தம்மைக் கண்ணின் கருப்பு விழியைப்போல் கவலையாய்ப் பார்த்துவந்த கர்த்தர் தம்மைச் சின்னாபின்னமாக்கி, தம்பேரில் சினங்கொண்டதை உணர்ந்தறிந்த அய்யாபிள்ளை தமது அநேகணக்கான பாவங்களை அன்பாய் மன்னிக்கவும், தமதுபேரில் கொண்டிருந்த கோபத்தில் தணிந்து தம்மைக் கடுஞ்சிறையினின்று விடுவிக்கவும் கெஞ்சி, அடியில் வரும் அருமையான பாடல்களை அழுது புலம்பி அன்பாய்ப் பாடலுற்றார்:—

## விடுதலையை விரும்பிய விண்ணப்ப கீதங்கள்.

1.

இராகம், காதநாமக்கிரியை. ஏகதாளம்.

(ஒத்த இராகம்:—"தேன் இனிமையிலும்."—ஞா. கீ.)

1. ஜெயில் சிறைவிட்டு—ஜெயவிருதிட்டு
க்ஷேமப்பட்டிருப்பது எப்போ! எப்போ!
வெயிலுக்குப்பட்டு—வெண்குடை தொட்டு
வேண்டுதல் விடுவது எப்போ! எப்போ!

2. படும்வதை நீங்கி—பலமதிலோங்கி
பகைஞர்முன் வாழ்வது எப்போ! எப்போ
அடுவதைத்தாங்கி—அன்பினுற்பொங்கி
அனைத்திலுந்தாழ்வது எப்போ! எப்போ!

3. சினமது தீர்ந்து—சிறுமைகள்போந்து
சிர்கதிப் பெறுவது எப்போ! எப்போ!
தினமுனை சேர்ந்து—திடமனஞ் சார்ந்து
தென்பாய் வருவது எப்போ! எப்போ!

4. பொருள்தனைப்போற்றி—புகழ்த்திசாற்றிப்
பொறுமையைவகிப்பது எப்போ! எப்போ!
இருள்பகைமாற்றி—இகதுயராற்றி
இன்பமாய்ச் சுகிப்பது எப்போ! எப்போ!



2.

இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

(ஒத்த இராகம்:—"சரணம் சரணம் சரணம் எனக்குன்
தயைபுரியும் என் பரனே."—ஞா. கீ.)

### பல்லவி.

சித்தமிரங்கியிச் சித்தாரிப்பைத்தீரும்
சியோன் குமரேசா! (ஸ்வாமி.)— சித்த.

### அநுபல்லவி.

எத்தனைநாளென்னை—மூத்தரித்துவைப்பாய்?
உத்தரிக்கமாட்டேன்—கர்த்தனே என்மீது.— சித்த.

### சரணங்கள்.

1. எந்தமட்டும் இந்தப்—பந்தேகானுவில் நான்
ஏங்கித் திரியச்செய்வாய்?
நொந்த என்மனம் நிர்ப்—பந்தத்தால் மீறுது
இந்தவதைபோதும்—எந்தாயென்மீது.— சித்த.

2. இங்கேயெனைவிட்டு—எங்கே நீ போகிறாய்?
இரங்க மனமில்லையோ?
அங்கமொடுங்கி—சிர்பங்கம்மேவிடுது
பங்கம் வையாதேபோ—சிங்கமே என்மீது.— சித்த.

3. அக்ரமக்காரரின்—உக்ரமத்தாலென்னை
ஆளச் சிறைகொடுத்தாய்
துக்கம்பெருகிச்—சகிக்கக்கூடுகில்லை
இக்கணமேயுறும்—அக்கரையென்மீது.— சித்த.

சிறையிலிருந்த சிறிதுகாலத்தில் அய்யாபிள்ளை மெய்யாய்க் குணப்பட்டார். தாவீது தன் பாவங்களுக்காக உண்மையாய் உருகிப் புலம்பின வண்ணம் தாசன் அய்யாபிள்ளை தம் நேசகர்த்தரை நோக்கி மனங்கசந்தழுது மன்னிப்புக்குக் கெஞ்சினார். கனகப்ப பிள்ளை கர்த்தரை நினைத்தார், தம் மெத்தையை நனைத்தார். பெண்சாதியை நினைத்தார், நெஞ்சமதுருகினார். பிள்ளைகளை நினைத்தார், அல்லல்கள் அடைந்தார். அண்ணன்மாரை நினைத்தார், கண்ணீர்கள் சொரிந்தார். அக்காள்மாரை நினைத்தார், துக்கங்கள் பெருகினார். சபையாரை நினைத்தார், அவயவம் நடுங்கினார். குருக்களை

நினைந்தார், நெருக்கமதடைந்தார். கோவிலை நினைத்தார், தம்மைப் பாவியென்றுணர்ந்தார். பாவங்களை நினைத்தார், கோபமனம்கொண்டார். தாசிகளை நினைத்தார், துவேஷமென்றுரைத்தார். உத்தியோகத்தை நினைத்தார், சித்தமதுருகினார். சீர்பெற்ற சென்னையின் பேர் பெற்ற ஹைகோர்ட்டில் ஏற்பட்ட அப்பீலின் தீர்ப்பையறிய தினந்தோறும் தினவுடன் விசாரிப்பார். நீதியின் அதிபதியாக நீணிலத்தில் கனம்பெற்ற ஆல்லோவேதுரை (Hon. Justice Holloway), அப்பீலில் அய்யாபிள்ளையின்மேல் ஏற்பட்ட அபாண்ட கேசின் தப்பறைகளைத் தகுந்தபடியறிந்து தக்கவிடுதலைசெய்ய கர்த்தனைநோக்கி நித்தமும் பிரார்த்திப்பார். அப்பிரார்த்தனைகளில் விசேஷித்தவைகளாவன:—

## விசுவாச வீர கீதங்கள்.

### 1.

இராகம், பியாகு. ரூபகதாளம்.

(ஒத்த இராகம்:—"இந்த வருஷமும் இந்த விருட்சம்."—சு. கீ.)

#### பல்லவி.

இந்தமட்டுஞ் சின்மாயென்மீது
இருந்ததும் போதும், ஸ்வாமி இருந்ததும் போதும்.

#### சரணங்கள்.

1. எந்தப் பொல்லாங்கை யான் எய்திடினுமுந்தன்
சொந்தப் புண்ணியத்தால் பொறுப்பாய்—மனம்
நொந்திருக்குமெனைச் சிறப்பாய்—இந்தப்
பந்தேகாறுனின்று திறப்பாய்—மகிழ்ந்
திருப்பாய்.— இந்த.

2. தொந்தமாய்த் தோன்றிய துஷ்டனுகிலும் நான்
தொந்தரைப்படாமல் காப்பாய்—பலர்
நிந்தைப் பேசிடாது பார்ப்பாய்—இந்நிர்ப்
பந்தம் விலகிடத் தீர்ப்பாய்—கதி
சேர்ப்பாய்.— இந்த.



3. அஷ்ட திசையெங்கும் அக்ரமனுமெந்தன்
கஷ்ட அனுபவந்தடுப்பாய்—பொருள்
நஷ்டத்தை லாபமாய்க் கொடுப்பாய்—இப்பி
ரஷ்டை ஜெயில் நின்று விடுப்பாய்—நலந்
தொடுப்பாய்.— இந்த.

4. பத்தியில் மெலிந்த பாவியெனைப்பிரம
ஹத்தி விலகக் கோல் நீட்டு—மனம்
பித்தந் தெளிவழி காட்டு—காவல்
முத்திரைத்தறித்துப்போட்டு—விட்
டோட்டு.— இந்த.

---

### 2.

இராகம், எமுனகலியாணி. அடதாளசாப்பு.

(ஒத்த இராகம்:—"பதியே நிதியே பரம."—ப. கீ.*)

1. (உனை) நம்பினபேரை—நாள்பட வதைக்கிறாய்
ஞாயந்தானோ? நில்லும்—அதுவுந்திரு
நேயந்தானோ? சொல்லும்.
2. (மனம்) வெம்பியழுவோரை—வேதனை செய்கிறாய்
வேடிக்கையோ? நில்லும்—குணப்பட
பீடிக்கையோ? சொல்லும்.
3. (தினம்) கும்பியுளைவோரை—கோலினலெய்கிறாய்
குறைகளெவ்வளவோ? நில்லும்—பாண்நீதி
நிறையுமளவோ? சொல்லும்.
4. (க்ஷணம்) கும்பிடுமடியரை—கொடுஞ்சிறை வைக்கிறாய்
குருசின் குணமோ? நில்லும்—நின்கலியாணப்
பரிசப்பணமோ? சொல்லும்.

---

### 3.

இராகம், இரமாமனோகரி. திரிசுரதாளம்.

(ஒத்த இராகம்:—"வரவேணும் எனதரசே."—ஞா. கீ.)

1. பதம் நம்பினேனருள் வேதனே
பவ சிறைத்தீர் பிரக்கியாதனே (ஸ்வாமி)
நீத மெனைக் காத்திருபோதனே
நீதனே, நீதனே, நேய விநோதனே.— பத.

---

* நாகை கனகப்பன் அய்யாபிள்ளை பாடிய பாடல்கள் அடங்கிய "பஜனைக் கீர்த்தனைகளின்" புத்தகம்.

2. சித்தமமைந்தேன் சேகரா
   சிறுமை விலக்குங் கிருபாகரா (ஸ்வாமி)
   முத்தமெனக் களிமனோகரா
   மூவரா, மூவரா, மும்முதல் ஏகரா.— பத.
3. காத்திருந்தேன் நான் நின்னேரம்
   கவலைப் பெருகுதே இவ்வாரம் (ஸ்வாமி)
   பார்த்தேன் எதிரிலுன் உபகாரம்
   பாரம், பாரம், பாரவிசாரம்.— பத.
4. வேறு துணையில்லை ஜெகதீசா
   வெளிப்பட நினைப்பதும் வெகு லேசா (ஸ்வாமி)
   ஈறும் முதலும் நீயே சருவேசா
   ஈசா, ஈசா, இன்புறும் நேசா.— பத.

---

4.

இராகம், தண்டகம். ஆதிதாளம்.

(ஒத்த இராகம்:—"மன்னவன் வரவேணும்."—ப. கீ.)

பல்லவி.

சினந்தணிந் தெனில் கிருபைகூரும்—இந்த
சிறையை விலக்க வகைபாரும் (ஸ்வாமி).—சின.

சரணங்கள்.

1. மனதறியாமலுன்னைக் கோரும்—நல
   மானதைத எனக்குத் தாரும்
   முனம் யான் செய்தப் பவந்தீரும்—ஸ்நான
   முழுக்கிறவெனைக் கதியிற் சேரும் (ஸ்வாமி).—சின.
2. ஏனோதானோ வென்றிராதே—எனக்
   கிப்படி வரலாகாதே
   மானேய்யடைகிறேனிப்போதே—பவ
   மன்னிப்பருள்வாயென்மீதே (ஸ்வாமி).— சின.
3. அநியாயக் குற்றஞ்சாற்றப்பட்டேன்—சித்தம்
   ஆனபடிக்கமைந்து விட்டேன்
   இனியுன் தாமதஞ் செய்யவொட்டேன்—வழி
   ஏதுஞ் செய்யிலன்றி விடமாட்டேன் (ஸ்வாமி).—சின.
4. அப்பீலுக்குப் போயேறும்—அங்கே
   ஆல்லோவே துரை மனம் பீறும்
   தப்பறைகளெடுத்துக் கூறும்—விலங்கு
   தறித்திட்டு நீரிளைப்பாறும் (ஸ்வாமி.)— சின



அய்யாபிள்ளையின்மேல் அபராதம் விதித்ததும், அருஞ்சிறைத்தீர்ப்பிட்டதும் அநீதம் என அபாண்டமானவைகளை அணு அணுவாய் அறிந்திருந்த அறிவு நிறைந்த ஆண்டவர் அய்யாபிள்ளையை மெய்யாய்க் குணமடையச்செய்தார். இனிமுந்தின அக்கிரமங்களை எந்த விதமும் நாடாத சொந்தநோக்கிக்கொண்டார். ஆகையால் நியாயத்தை நியாயமாகத்தீர்க்க ஹைக்கோர்ட் நியாயாதிபதி ஆல்லோவே துரைக்கு நேர்மையாய்ப் புகட்டினார். அப்பீலில், அப்போதைய பாரிஸ்டர் ஷெப்பர்ட் துரை (H. H. Shephard, Esq.) கேஸின் தப்பறைகளைத் தக்கபடி எடுத்துரைக்க, பொன்னன் பாரிஸ்டர் (T. C. Ponnan, Esq.) நன்னயமாய்ப்பேச, அய்யாபிள்ளையின்மேல் ஆக்கப்பட்ட கேசு அபாண்டம் என்றும் அய்யாபிள்ளை அற்பதண்டனைக்கும் அருகர் அல்ல என்றும் ஆல்லோவே துரை அநேக ஆழமான காரணங்களைக்கொண்டு ரூபித்து, ஆக்கினையையும் அபராதத்தையும் அடியோடே அகற்றினார். அய்யாபிள்ளையின் விடுதலையைப்பற்றிய ஹைக்கோர்ட்டாரின் தீர்மானம் அவரது இனத்தாரால் உடனே அவருக்குத் தந்திமார்க்கமாய்த் தெரிவிக்கப்பட்டது. அட்சணமே அய்யாபிள்ளை ஆண்டவரின் பாதத்தில் விழுந்து, "ஆண்டவரே, தேவரீர் செய்த எல்லாக் கிருபைகளுக்கும், எல்லா உண்மைக்கும் நான் எம்மாத்திரம்" என்று (1 மோசே. 32: 10.) யாக்கோபைப்போல தமது அபாத்திர நிலைமையை அறிக்கையிட்டுப் பாடியதாவது:—

இராகம், சகானா. ஆதிதாளம்.

(ஒத்த இராகம்:— "இந்த மங்களம் செழிக்கவே."—ஞா. கீ.)

பல்லவி.

உந்தனன்பென்மீது வந்திட ஓர்போது
முந்த நான் நடந்ததேது ?

அனுபல்லவி.

எந்தவேளையுந்தீது—இடர்கள்மோசம்வாது
நிந்தை நிபுணங்கள் சூது—நேர்ந்ததேனேயல்லாது.—உந்த.

சரணங்கள்.

1

புண்ணியமென்றோர்கந்தை—புரிந்தேனே அருவம் சிந்தை.
பண்ணினாயிது விந்தை
புண்ணாக நின் சிந்தை—புலம்பவே எளிவந்தை
கண்டேனுக்கியுன் மந்தை—கணக்கில்சேர்க்கவே தந்தை.—உந்த.

2

காலமெல்லாங் கழித்தேன்—கனவுபோலே விழித்தேன்
காலவே பேரழித்தேன்
கோலாகாலத்தழைத்தேன்—கொடுமையாகப்பழித்தேன்
மேலாலேயென்னுழைத்தேன்—வீண்செய்கையில் செழித்தேன்.—உந்த.

3

நினையாவருமுன்னேரம்—நிமைப்பொழுதிலென்பாரம்
நீக்கினாயே விசாரம்
தலையுணர்ந்தெங்கோம்—தண்ணியுமோ பாண்கோரம்
வினைதீர்த்தாய் சமுசாரம்—வினைவிடகுருவாரம்.— உந்த.

அன்றியும் தமக்கு அனைவரும் அறிய ஆசித்த விடுதலையைத் தந்து அன்பாய் ஆசீர்வதித்த ஆண்டவரை நோக்கி ஆநந்தித்துப் பின்வரும் பாட்டைப் பாடினார்:—

### ஆநந்த கீதம்.

இங்கிலீஷ் இராகம்.

(ஒத்த இராகம்:—"சரணம் சரணம் சருவேசா."—ப. கீ.)

1. ஆநந்தம் ஆநந்தம்—அனைவரும்மகிழ்ந்தோம்
ஆளும்பரனின்—காலிணையுவந்தோம்
ஆநந்தமாநந்தம்—அன்பரின் சுகந்தம்
வானவர்சந்தம்—வழிபடிவிந்தம்.
2. காணக்கிடைத்தது—கடவுளின்நேசம்
கண்டுவெடித்தது—கடையனின்பாரம்
பாணம்போற்சிறும்—பரனுபகாரம்
தோணும்மலேதீரும்—தொல்லைவிசாரம்.
3. காத்தோம்நித்தம்—காலலஞ்சித்தம்
கருணையாய்முத்தம்—களித்தார்தத்தம்
பார்த்தெனையேர்த்து—பலத்திடெய்கியித்தம்
பகிர்ந்திட்டார்சற்றுப்—பலமீங்கசுத்தம்.



4. விந்தைவிநோதா—வினைநீக்கும்பாதா
விஞானலாகாதா—வேதப்பிரக்யாதா
சிந்தையில்சேர்ந்து—சிரிக்கிறேன் ஆதா
வந்தெனையேர்ந்து—வளைதிருந்தாதா.

### படிப்பினை.

"கடும் புயலில்தான் மாலுமியைத் தெரியும்,
கடும் வறுமையில்தான் சிநேகிதனைத் தெரியும்,
கடும் துன்பத்தில்தான் விசுவாசியைத் தெரியும்."—
[ஞா. தொ.

## 7. நித்தரும் நீதனை நேர்ந்ததும் பத்தனாய் அவர்பதம் சேர்ந்ததும்.

அய்யாபிள்ளைத் தமது அருஞ்சிறையை அகற்றிய பெருமானைப் போற்றிசெய்து, மறுபடியும் நாகைக்கு மருங்குடன் திரும்பி மகிமையாய் வாழத் துவக்கினார். கொரடாச்சேரியில் காடான காட்டாறுகளுக்கு மூரடான அணைகளை முனையுடன் போடும் திறமான கவர்ண்மெண்டின் ஸ்திரமான கண்ட்ராக்டராய் விரைவுடன் வேலைபார்த்தார். பிறகு திவரூரின் உள்புறத்தில் மேவிய அமூரில் ஆவலாக கண்ட்ராக்ட் எடுத்து அதிதிறமையாய் அதையும் முடித்தார். சர்ச்சனார் அய்யாபிள்ளை தம் மச்சுவீட்டின்முன்னிருந்த குச்சு கொட்டகையின்கீழ் தச்சுப்பட்டறைவைத்து, உச்சித உழைப்பாளிகளைக்கொண்டு கச்சிதவேலைகள்செய்து பலர் மெச்சத்தக்கதாய் கண்யமாய் காலங்கழித்தார். பின்பு ஆவிவர் துரையிடம் வேலையாயமர்ந்து காலையும் மாலையும் தூக்க வொண்ணா பெருமரங்களை தாலைக்கொண்டளந்து சிலமாய்ச் சிற்சில காலத்தைத் தள்ளினார். கடைசியாய், முனிசிபல் ஆபீசில் முதலாவது ஏற்படுத்திய முதல்தர கைத்தொழிற்சாலையில்

(Victoria Industrial School) முன்னின்று நடத்தும் முதன்மை சூப்ரின்டெண்டு (Superintendent) ஆகினர். முனிசிபல் சம்பந்தம் முற்றிலும் நீங்கியபின், அத்தொழிற்பாடசாலையை மெத்தவும் மதிப்புக்குரிய பத்துப்பங்காளிகளின்கீழ் சித்தமுடன் அமைத்தார். தாமும் அவர்களுடன் ஒக்கபங்காளியாகவும் புத்தியாய்க் காரியங்களை யுத்தியுடன் நடத்தும் கனத்த சூப்ரின்டெண்டாகவும், சுறுசுறுப்பாய்க் கருத்துடன் ஒறுத்து உழைத்தார். தொழிற்சாலை செழித்து ஓங்கிற்று. அச்சுக்கொட்டடியும், தச்சுப்பட்டறையும் எச்சமயமும் ஆகத்தக்க கச்சிதபணிகளால் மிச்சமாய் நாகையில் மேன்மையுடன் விளங்கின. இக்காலத்தில் அய்யாபிள்ளையின் அறிவு நாகையாருக்கு மெய்யாய்ப் பிரயோசனப்பட்டது. தமது ஆயுளின் பிற்காலமாகிய அக்காலத்தில் அய்யாபிள்ளை எக்காலத்திலும் ஏகனைத் தம் இருதயத்தில் தியானிப்பார். ஆதிவார அதிகாலையில் வேதியனின் ஆலயஞ்சென்று ஓதிய பிரசங்கங்களுக்குத் தோதான குறிப்பெடுத்துக் காதலுடன் கவிகளைக் கட்டிக் களிகூருவார். உலகத்தின் உல்லாசங்களை ஒவ்வொன்றாய் ருசித்தறிந்த அய்யாபிள்ளை அவைகளை உண்மையாய் உதம்பி ஊக்கமுடன் பாடிய பாடல்களில் பின்வருவது ஒன்று :—

## உலக வெறுப்பு.

இராகம், முகாரி. அடதாளசாப்பு

1. உலகமே! உன்னால் வரும் கலகமே!—உலகமே! விலகு எனைவிட்டு—அலகே அகன்றுபோ.
2. புகழுவாய்! பின்னால் இகழுவாய்!—புகழுவாய்! மகிழேன் உனைக்கண்டு—நிகழென்முன் நில்லாய்போ.
3. எச்சல் நீ! பெரும் லச்சை நீ!—எச்சல் நீ! இக்ஷணம் எனைவிட்டு—சச்சரவின்றிபோ!
4. மோசம் நீ! பரிகாசம் நீ!—மோசம் நீ! நின் நேசமதால்வரும்—நாசமே வேண்டாம்போ.



5. நேசனே! பாவ விநாசனே!—நேசனே! பேர் நீசனே புன்னிடம்—பேசவிரும்பேன்போ.
6. தரணியோ! பின்னால்கூறும் புறணியோ!—தரணியோ! மூராதே சற்றுனைத்—திரணம்மதியேன்போ.
7. இன்பமோ! வீணும்வெறும் ஜம்பமோ!—இன்பமோ! நம்பேன் உனை ஓர்—துரும்பாகவும் தூபோ.
8. இச்சையோ! எறிகண்ணி கச்சையோ!—இச்சையோ! பிச்சை இரப்பேனுன்—மெச்சுதல் கோரேன்போ.

அய்யாபிள்ளை தாம் அரதேச சஞ்சாரம்பண்ணிய ஆகாத உலகை விட்டகன்று தம் சாகாத ஆண்டவர் சஞ்சரித்த சகல சம்பூரணங்களின் நிறைவுமுள்ள சதாகால சந்தோஷ ஸ்தலத்தை அடைய அதிக ஆவல் ... விரும்பினவராய்த் தமது மரணத்தை நல்மனதுட ... வாஞ்சித்துப் பாடியதாவது :—

## மரணத்தை வாஞ்சித்தல்.

இராகம், மலையாமி. திரிசரதாளம்.

(ஒத்த இராகம்:—"ஐயையா நான் பாவி."—ஞா. கீ.)

### பல்லவி.

(ஐயா) வாரும்லோக மீட்பரே—வந்தென்
கோருதலைக் கேட்பீரே.

### சரணங்கள்.

1. ஊரும் உறவோரும்—உரியபெண்டீர்பிள்ளை
உதவும் காலமோ ஐயே—இப்போ
காரும் எனக்கைக்து—காயம் அடைக்கலம்
கதிதந்திரசுநீ மெய்யே.— வாரும்.

2. பூவில் பெருக்பொருள்—போதும் செல்வம் கீர்த்தி
பொய்வாழ்வைக் கண்டேன் ஐயே—இப்போ
சாவு எனைக்கிட்டி—சபீபிக்கமனம்
சந்தோஷிக்குது மெய்யே.— வாரும்.

3. அழியுமிப்பாழ்கட்டைக்—கானகங்தேடி
அலேந்தும் காணேன் ஐயே—இப்போ
குழியில்புதைபட—கொடும்போமென் பிரேதம்போய்
கோலம் கொண்டது மெய்யே.— வாரும்.

4. என்னுடைய உள்ளது—என்ற சொல்லுரிமை
எங்கே இக்கோம் ஐயே—இப்போ
நின்னருளே நிலே—நிகரும்யாவும்வலே
நிஜமிது கண்டேன் மெய்யே.— வாரும்.

5. ஜென்மத்தாலும்கர்ம—செய்கையாலும் நான்
சிரேஷ்ட பாதகன் ஐயே—இப்போ
நின்மரணம்பாடு—வேர்வை ரத்தத்தாலும்
வினைதீர்த்தருளும் மெய்யே.— வாரும்.

6. மரணப்படுக்கையில்—மனம்பேதித்தலேயா
மாறுக்கண்ணேக்க வையே—இப்போ
திரணமும் இகழ்து—சிந்தை அனுகாது
திடவிசுவாசம் பெய்யே.— வாரும்.

7. கடைமெய்தன் மூச்சையுங்—காத்திலோப்புவிக்க
சுணப்புத்தி தாரும்ஐயே—இப்போ
விடையாவரிடம்பெற்று—விறைவுடனும்பரம்
வேண்ட கிருபை செய்யே.— வாரும்.

8. ஆமேனென்றுசொல்லி—அயர்ந்து என் ஆத்மாவை
அபயமுறசெய் வையே—அப்போ
ஆம் மேல்வாரேருடன்—அல்லேலூயாபாடி
அனந்த பஜனை செய்வேன்.— வாரும்.

அய்யாபிள்ளை அருமையாய்ச்சேர்த்து ஆடுகளாக்கித் தந்த சபைக்கும் அவ்வாடுகளின் அருமை மேய்ப்பராகிய குருவுக்கும் கல்லறை விஷயத்தில் இல்லாத வழக்கத்தை ஏற்படுத்தியதை முன்னிட்டு மாமிசசம்பந்தமாய் மனக்குறைச்சல் உண்டானதைக் கண்டு, அவர் குருவுக்கும் சபைக்கும் குறையற்ற சமாதானத்தைக் குணமுடன் ஸ்தாபிக்கக் கூடியமட்டும் பிரயாசப்பட்டும் முடியாமல் மிகவும் மனமுறிவுகொண்டார்.



அய்யாபிள்ளை 1891-ம் வருஷம் ஜனவரிமாதம் திடீரென்று இருதயநோவால் படுக்கப் பெலனற்றவராய் மூச்சு இழுத்துக்கொண்டு மெத்தவும் உபாதைப்படத் துவக்கினார். நடுவில் கொஞ்சம் சுகம்பெற்று ஸ்நானம் செய்தார். ஸ்நானம்செய்த மறுநாள் திரும்பவும் தொழிற்சாலைக்குப்போய் எழுத்து வேலைகளை இழுக்கற நடப்பித்தார். ஆனால் அன்றுபகல் உள்ளேயிருந்த வியாதி திரும்பவும் சன்னியாய் இரட்டித்துவரவே அவ்வியாதியால் ஒருமாதகாலம் உபாதிக்கப்பட்டார். தமது இளவயது பாவங்களுக்காக யெகோவாவைநோக்கி இறைஞ்சி அழுது இரக்கமாய்த் தமக்கு அளிக்கப்பட்ட இந்தக் காலத்தைத் தமது பிந்தின ஆயத்தகாலமாக்கிக் கொண்டு தம் மரணத்தை அதிகமாய் வாஞ்சித்தவராக பெலன்குறைந்த அந்த நேரத்திலும் பேன், இங்கி தரக் கேட்டு பின்வரும்பாடலை எழுதினார் :—

## நல்ல மரணத்தை வாஞ்சித்தல்.

இராகம், புன்னாகவராளி. ஆதிதாளம்.

### பல்லவி.

நல்லமரணம் தாரும்—வெல்லேப்பதியிற் சேரும்
வல்லாயனேஸ்பரா நீரும்.

### அநுபல்லவி.

இல்லறவாழ்க்கை நன்று—எல்லாமிருக்குமென்று
உல்லாசங்களகன்று—புல்லாய்வாடியநின்று.— நல்ல.

### சரணங்கள்.

1. கண்கால்கரங்கள்ஆடா—புண்ணென்பதொன்றும்கூடா
தண்புரிபுமேவாடா—தாவிதுநாடா
எண்ணிறந்த பலநோய்—ஒன்றாது படுக்கையில்பாய்
மண்ணில்றங்குபோதாய்—பண்ணும்வாரதுசாதாய்.—நல்ல.

2. பாயம்படுக்கையுற்று—சாயசக்தியற்று
நோய்படா செய்யுமுற்று—நோக்குமெனைக்கண்சற்று
அயா எழையின்சொந்த—தாயா துணையிருந்த
நேயா இத்தரைவந்த—சேயா எனக்குமுந்த.— நல்ல.

1891-ம் வருஷம் பெப்ரவரிமாதம் 24-ம் தேதி செவ்வாய்க்கிழமை வீட்டிலிருந்த ஒவ்வொருவரையும் தம்மிடம் விரும்பி அழைத்து அவரவர்க்கேற்ற அன்பான புத்திமதிகளைச் சொன்னார். ஒருவருஷத்துக்கு முன்னதாகவே தமக்கென்று ஒழுங்காய்ச் செய்துவைத்திருந்த சவப்பெட்டியை மெத்தையிலிருந்து கீழ கொண்டுவரச் சொல்லி இரண்டு பெஞ்சு பலகைகளைத் தாம் காட்டியபடிவைத்து, அவைகளின்மேல் அப்பெட்டியை வைக்கச் சொன்னார். தம்மைப்பார்க்க வந்தோருக்குந் தாம் மறுநாள் மகிமைபொருந்திய மறுஉலகஞ் சேர்வதாகச் சொல்லி விடைபெற்றுக்கொண்டார்.

25-ம் தேதி புதன்கிழமை காலை பட்டணமிருந்து வந்த தம்மக்களிடம் விடைபெற்றுக்கொண்டார். அவரது சிறிய தமக்கையார் மகன் ம-ள-ள-ஸ்ரீ. அ. சாமுவேல் பொன்னுசாமிபிள்ளை: கர்த்தருக்குள் சமாதானமாய் இளைப்பாறுங்கள் என்று காதில் பலக்கத் தொனித்ததைக் கேட்டு, அப்படியே, அப்படியே என்று இருமுறை அழுத்தமாய் உரைத்தார். கொஞ்சநேரத்திற்குப்பின்: மணி என்ன என்று கேட்டார், எட்டேகால் என்று சொல்லப்பட்டது. 10-மணி சுமாரில் நாகை ஞா. ஈசாக்கு ஐயர் சிறு ஜெபம்செய்து வீட்டுக்குத் திரும்ப அடி எடுத்துவைக்கும் சமயத்தில், அய்யாபிள்ளை அகஸ்மாத்தாய் கண்திறந்து பார்த்து, ஐயரை அருகில் வரச் சமிக்கினைச்செய்தார். ஐயர் அருகில் வந்ததும், நேசவசுஐயர் அய்யாபிள்ளையை அழைக்கும் தருணம் அதிசமீபித்ததால், நாட்டையர் "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்னும் பல அருமையான வேதவாக்கியங்களை உரத்தசத்தமாய் உரைத்துக்கொண்டிருக்கும்போதே அய்யாபிள்ளை பரம அய்யாபிள்ளையாகத் தமது அருமை ஆவியை ஆண்டவரின்வசம் அன்பாய் ஒப்புவித்து அமைதலாய் இளைப்பாறினார்.



26-ம் தேதி வியாழக்கிழமை விடியற்காலம் 7-மணிக்கு அய்யாபிள்ளையின் பங்களாவீட்டில் துக்க ஆராதனை துவக்கப்பட்டது. "என் சீவன் கிறிஸ்துதாமே" என்ற ஞானப்பாட்டின் மூன்று கவிகளைப் பாடியபின், ஸ்தலத்து ஐயர் தவசு காலத்துக்குத் தகுந்தபடி * மத். 26: 39—ன்பேரில் ஆறுதலான ஒரு பிரசங்கத்தைச்செய்து.ஜெபத்தோடுமுடித்தார். அதற்குப்பின் சவப்பெட்டி பொட்டகிராப் படம்பிடிக்க பங்களாக்கட்டடத்துக்கடுத்த வெட்டவெளியான நிலத்தில் பெஞ்சுகளின்மேல் தூக்கிவைக்கப்பட்டது. சிறப்பான பொட்டகிராப்பைச் சீராய்ப்பிடித்தபின் திறப்பான பெட்டியைத்திரும்பவும் பங்களாவுக்குக்கொண்டுபோய் மறைப்புப்பலகையை எடுத்து மருங்குடன் அதன்மேல்வைத்து மூடினார்கள். பின்பு அய்யாபிள்ளையின் பெட்டியை அவரை அன்பாய் நேசித்த சபையார் சகல மரியாதையுடன் தங்களின் தங்கமான தோள்களின்மேல் சங்கையுடன் தூக்கி, "புல்லைப்போல் எல்லாரும் வாடி" என்கிற அரிய ஞானப்பாட்டோடு அவர் அன்பாய்க் கட்டித் தந்த அழகிய ஆலயத்துக்குள் கொண்டுவந்தார்கள்.

ஐயர் அடக்கமுறைமையின் முந்தின ஆராதனையை அவ்விடத்தில் செய்தார். ஆலய அடக்க ஆராதனைமுடிந்தபின் பெட்டியைத் தூக்கி வெளியே கொண்டுவந்து, அய்யாபிள்ளை தாம் காஷ்கிப்பான போது தம்·முதல் சம்பளம் நூறுரூபாயைக்கொண்டு ஒரு கோச்வண்டியை வாங்கி, சவவண்டியாக சரிப்படுத்தி வைத்திருந்த வண்டியில் அப்பெட்டியை வைத்தார்கள். நாட்டையரும் பாடகரும் பெட்டிக்குமுன்னும்; பெட்டியைச்சூழ திரளான சபையாரும், பெட்டிக்குப்பின் புறமதஸ்தரான அநேக ஜனங்களும்

---

* தரங்கை ஞா. சாமுவேல் ஐயர் இயற்றிய "சமயோசித வேதவாக்கிய குறிப்பு" என்னும் நூலின் 54-ம் பக்கம் பார்க்க.

திரண்டுவர, கோவில்மணி ஜோபிதமாய்த் தொனிக்க, வழியில் ஞானப்பிரார்த்தனைகளும், பஜனைக்கீர்த்தனைகளும் முறைமுறையாய் முழங்க, அய்யாபிள்ளையின் பிரேதம் சுமார் ஒருமயில் தூரமுள்ள சவக்கொல்லைக்குக் கொண்டுபோகப்பட்டது. சவக்கொல்லைக்கு நெருங்கின உடனே சபையார் சவப்பெட்டியை வண்டியை விட்டு எடுத்து, சுமந்துகொண்டுபோய், குழியருகே வைத்தார்கள். அடக்கமுறைமையின் பிந்தின ஆராதனையானதும், உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்கென்று அந்த உயிர்த்தான தோட்டத்தில் ஒரு விதை உறுதியாய் விதைக்கப்பட்டது.

### படிப்பினை.

"திருப்தியுள்ளவனுக்குத் தரித்திரமில்லை,
பொறுமையுள்ளவனுக்குத் துன்பமில்லை,
விசுவாசித்த மரணமேயில்லை."—ஞா. தொ.

## முடிவுரை.

அரும்பதவி அடைந்து ஆண்டவர்பதம் சேர்ந்த அய்யாபிள்ளையின் அரிய குணங்கள் ஒவ்வொன்றையும் அகிலத்தோர்க்கு அடுக்கடுக்காய் எடுத்து அறிவிக்கக் கருதி இச்சிறிய நூல் எழுதப்பட்டது. அய்யாபிள்ளையின் அரிய லட்சணங்கள் அநேகம் உள :—

### வீட்டில்.

அய்யாபிள்ளை பூமியில் போற்றற்குரிய புண்ணிய புருஷர். அன்பில் மிகுந்த அருமை தகப்பன், தாழ்ந்த குடியைத் தாங்கவந்தத் தங்கத் தம்பி. பெற்றோரைப்பேணி விசாரித்த உற்ற பிள்ளை. எந்தப் பொருளும் இல்லை என்று சொல்லாத நல்ல குணவந்தர். பந்து ஜனங்களை மனம் உவந்து நேசித்தவர்.



### நாட்டில்.

தரித்திர தசையில் பிறந்து முதல்தரதசைக்கு உயர்ந்தவர். தஞ்சை சமஸ்தானத்தில் வித்தைபெற்றிலங்கியவர். ஈகைக்குணம் நிறைந்து நாகையிற் சிறந்தவர். கிறிஸ்தவர் பலருக்குப் பெருத்த உத்தியோகங்கள் செய்வித்தவர். சிறிதுகாலம் கர்த்தரை மறந்ததால் அரிய துயர்களை அடைந்தவர். சஞ்சலங்களின் நடுவில் கொஞ்சமுங்குறைகூறாது, தம் மிஞ்சின மீறுதல்களுக்காக நெஞ்சமுருகி அஞ்சுகாயனை நோக்கிக் கெஞ்சி இறைஞ்சினவர். சமய உசித சம்பாஷணையில் சாதூரிய சமர்த்தர்.

### திருச்சபையில்.

ஆத்தான்சபையை நாகையில் கர்த்தருக்கென்று நற்சிரத்தையுடன் சேர்ந்த மிக உத்தம புருஷர். திரியேகர் ஆலயத்தை உரிமையுடன் கட்டி அரிய ஆத்தான் சபைக்குப் பிரியமுடன் அளித்த உண்மை ஊழியர். தென்இந்தியாவில் பெரும்பாலும் தமிழ்க்கிறிஸ்தவர் மிகத்தரித்திரர். அருமையாக சிலர் பெரும் உத்தியோகஸ்தராகி, பெரும்கீர்த்தியும் பெற்று, ரூபாய் ஆயிரக்கணக்காய்ச் சம்பாதித்தாலும் தாங்களும் தங்கள் பிள்ளைகளுமாக ஆஸ்திகளைச்சேர்த்து, பூஸ்திதிகளை வாங்கி சுயநயத்தை நாடிய சுயகாரிய புலிகளாக சுபமங்களமாய்ச் சுகிக்கிறார்களேயன்றி, கர்த்தருக்கென்று பலனையும் பெலனையும், பையையும் கையையும், கருத்தோடும் உரித்தோடும் செலவழிப்போர் சிறுபான்மையோர். இவ்வகையாகத் தம்மை வெறுத்துத் தலைவனை நேசித்த பொன்னனை சிந்தை நிறைந்த பிரபல்லிய கீர்த்திவந்தர். கொஞ்சகாலம் தம் பாவ சஞ்சாரத்தினிமித்தம் கர்த்தர் அவரைக் கடுஞ்சிறைக்குட்படுத்திய போது முறுமுறுக்கவில்லை, அல்லது மனக்கடினப்பட இடம் கொடுக்கவில்லை.

காயீனைப்போல் தியனாய்த் திரியவில்லை. பார்வோனைப்போல் பராபரன் ஆர் என்று அழியவில்லை. சவுல் ராஜனைப்போல் ஏவையை ஏமாற்றின பாவ ஆவிக்கு இடம் தரவில்லை. ஆனால் கர்த்தரின் இருதயத்திற்கேற்ற உத்தம புருஷனாகிய பக்தன் தாவீதைப் போல மெத்தவும் உத்தம மனஸ்தாபப்பட்டு, தபசு சங்கீதங்கள்போன்ற தபசுகீதங்களைத் தன்மையுடன் பாடி, உண்மையாய்ப் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொண்டார். அய்யாபிள்ளையின் உத்தம ஜெபம் கர்த்தரால் கேட்கப்பட்டது.

அய்யாபிள்ளையின் மெய்யான சரித்திரத்தை மனம் தொய்யாமல் அறிந்துகொண்ட பெரியோரே! சிறியோரே! அவரது தவறுதல்களைத் தள்ளி, மேலே சொல்லிய மேன்மையான லட்சணங்களில் மென்மேலும் விளங்கி மேதினியில் துலங்க மேலுலக மேன்மைப்பிரதாபன் மேலும் மேலும் அருள்செய்வாராக.

"நன்றாயிருப்பீர்களென்று நீதிமான்களுக்குச் சொல்லுங்கள்; ஏனெனில் தங்கள் கிரியைகளின் கனியைப் புசிப்பார்கள்." (ஏசாயா. 3: 10.)

"நீதிமானின் பேர் ஆசீர்வாதமாக இருக்கும்." (வாக்கியங்கள். 10: 7.)

Printed at the M. E. Publishing House, Vepery, Madras—1